

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

செப்டம்பர் 2020

## கவிஞரேறு வாணிதாசன்
நினைவு

## மதுரையில் மீண்டும் ஒரு காளமேகப் புலவர்

பாவலர் திருமிகு வீரபாண்டியத்தென்னவரின் நேர்காணல்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | செப்டம்பர் 2020

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸ்ரீ ரஹ்மான்**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

நூல்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்
editor@tamilnenjam.com









# நெஞ்சோடு நெஞ்சம்



அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

இன்னும் எத்தனைத் திங்கள்தான் நம்மை நாமே முடக்கிக்கொண்டு வாழப்போகிறோம் என்பது தெரியவில்லை. கொரோனாவெனும் கொடிய வைரஸ் நம்மையெல்லாம் அடக்கி ஒடுக்கிவிட்டது. பணியகத்தில் தொழிற்சாலைகளில் வேலைகள் குறைவு. அதனால் பணி நீக்கம், வருமானமின்றி அல்லது வருமானம் குறைவால் தவிக்கும், அல்லலுறும் மக்களை உலகம் முழுவதும் காணமுடிகிறது.

சிலஇடங்களில்,வேலையின்றிசம்பளம்வருகிறதே என்ற சந்தோஷத்திலுமிருப்பதையும் கண்கூடாகக் காண முடிகிறது.



வசதிகுறைந்த நிரந்தரமற்ற பணியாளர்கள்தான் மிகவும் துன்பத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள். அப்படியானவர்களுக்கு போதிய உதவிகள் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். அப்படியானவர்களுக்கு நல்லுள்ளம் கொண்ட மக்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு சாதி, பேதம் மறந்து உதவிகரம் நீட்டி வருகிறார்கள் என்பதை அறியும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த தருணம் சாதிகள் மறக்க சந்தர்ப்பம் தந்திருக்கிறது. உலகில் பிறந்த நாம் அனைவரும் தொப்புள்கொடி உறவுகள் என்ற உணர்வை வளர்த்து ஒருவருக்கொருவர் உதவிகள் புரிந்து நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்வோம்.

இலக்கிய அமைப்புகளும், சோசியல் குழு அமைப்புகளும், ஜூம், கூகுல்மீட் போன்ற பலவழிகளின் வழி கவியரங்கம், கலந்துரையாடல், கருத்தரங்கம் போன்றஒன்றுகூடலைசெய்துதமிழுணர்வு தடைபடாமல் செய்து வருகிறார்கள். இவைகள் பாராட்டபடவேண்டிய செயல்களாகும். அப்படியான அமைப்புகளுக்கு, அதன் நிர்வாக குழுவினருக்கு தமிழ்நெஞ்சம் இதழ்சார்பாக நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.




அனைவரும் கொரோனாவிலிருந்து காத்துக் கொள்ள கவனமாக இருக்கவும். விரைவில் பெரியதோர் இலக்கிய விழாவில் நேரில் சந்திப்போம். நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

# வறுமையில் பாகங்கள்



ஏடி வரதராசன்

I
வார துளிநெய்க்கும் வாய்ப்பற்று நாளும்கண்
ஈரத்தால் மட்டும் இளைக்கவிட்டு - பாரம்
பறக்காமல் காக்கப் பரிதாபக் கூந்தல்
உறங்கும் புயலில் உணர்ந்து.

I
இட்டுள்ள நீரால் இனியும் பயனற்றும்
தொட்டுவைக்கும் நித்தம் துடிவிரல்கள்; - மட்டில்லா
பற்றில் வணங்குமிறை பாறை எனவறிந்து
நெற்றி அழுமே நிதம்.

I
வானளக்கும் வாழ்வெல்லாம் வாழ முடியாமல்
காணஇமை என்னும் கதவடைக்கும் - நாணத்தால்
கோடி சுமையோடுக் கொப்பளிக்கும் கண்ணீரை
வேடிக்கைப் பார்த்தே விழி.

I
ஆறு பெயரறியும் ஆனால் சுவைத்ததில்லை
நூறு சுமைச்சுவைகள் நூர்ப்பதினால் - மாறும்
எனநாசி பல்லும் இதழ்மறைக்கும் நாக்கும்
கனவில் துடிக்கும் கரைந்து.

I
நாளைப் பசிக்குதென்றால் நானென்ன செய்வேன்இவ்
வேளைதான் உண்ண வெறுங்கஞ்சோர் - மூலையில்நீ
போய்ப்படுப்பாய் என்கின்ற புண்சொல் மடுத்துண்ண
வாய்ப்பின்றி ஏங்கும் வயிறு.

I
பஞ்சந் தலைக்கேறப் பாதி தினங்கண்கள்
கஞ்சம் வடித்தே கரைந்தவிழ; - நெஞ்சத்தின்
ஓலம் அறிந்தே உயர்கூலிக் கேட்பதற்குக்
காலமெலாம் ஏந்தும் கரம்.

I
தேடுவது எத்தனைநாள்; திக்கே தெரியாமல்
ஓடுவது எத்தனைநாள் ஓ!!இறைவா!!! - நாடுவது
எங்கென்று அறியாமல் ஏங்கும் நிதம்நடந்துக்
கங்கு சுமக்கின்ற கால்.



# சேற்று வயலோரம்

நிலைமண்டில ஆசிரியப்பா

சேற்று வயலில் சிந்திய புன்னகை
நாற்று போலவே நட்டாளே கண்ணே
நேற்று இரவு நினைத்துக் கொண்டேன்
நெற்றி முத்தம் நெஞ்சில் நிற்கவே
காற்று அடித்து கதைகள் கூற
தோற்றுப் போனேன் துடித்து நானே
மாமன் நெஞ்சில் மயிலே வந்தாய்
காமம் கொண்டேன் கன்னி உன்னால்

நெல்லும் வெளஞ்சி நெருங்கி நிக்குது
வில்லுப் புருவம் மிளிர்ந்து வளையுது
வள்ளி முருகன் வருவான் என்றே
துள்ளி நீயும் தூரம் போகாதே
அள்ளி வந்தே அணைத்து மகிழ
கள்ளி நீயும் கண்ணைக் காட்டு
தள்ளி நில்லாது சட்டுனு வாடி
பள்ளி கொள்வேன் பைங்கிளி உனையே

**கவிஞர் தென்றல் கவி**
(தமிழ்ச்சிட்டு)



# கவிஞரேறு வாணிதாசன்

திருமதி. க. மலர்வாணி ஜெயராஜ்
பிரான்சு.

வாணிதாசன் பிரபல தமிழ்க் கவிஞர். தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களில் ஒருவரும் பாவேந்தர் பாரதிதாசனின் மாணவருமான வாணிதாசன் நினைவு (07. 08. 2020) தினம் கொண்டாடப்பட்டது.

புதுவை மாநிலத்தின் வில்வ நல்லூர் என அழைக்கப்பட்ட இன்றைய வில்லியனூரில் 22. 07. 1915 ல் பிறந்தார். இவரது இயற்பெயர் அரங்கசாமி. கவிஞரின் ஏழாம் வயதில் தாயார் இயற்கை எய்தினார். பாட்டியின் செல்லப்பிள்ளையாக, தந்தை மற்றும் சிற்றன்னையின் அரவணைப்பில் வளர்ந்தார் கவிஞர். இரண்டாண்டுகள் திண்ணைக் கல்வி கற்றார்.

பின்னர் வில்லியனூர் பள்ளியில் தன் கல்வியைத் தொடர்ந்தார். அங்கு எல்லப்ப ஆசிரியர், முத்துக்குமாரசாமி பிள்ளை ஆகியோர் ஆசிரியராக இருந்தனர்.



தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட இவர் தமிழும், பிரெஞ்சும் கற்றார். பள்ளி இறுதித் தேர்வில் புதுவை மாநிலத்திலேயே முதல் மாணவராக வெற்றி பெற்றார்.

இவருக்கு பாவேந்தர் பாரதிதாசனாரோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவரை தனது ஆசானாக ஏற்று கவிதைகளைப் படைத்தார். இவரது கவிதைகளை வெளியிட்டு வந்த "தமிழன்" இதழாசிரியர் இவருக்கு ''வாணிதாசன்'' என்று பெயர் சூட்டினார். அன்று முதல் இயற்பெயர் மறைந்து வாணிதாசன் என்ற பெயரே நிலைத்தது. 1945 ல் சென்னையில் வித்வான் பட்டம் பெற்றார். புதுவை திரும்பியவுடன் கல்வே கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

"பொன்னி, காதல், முரசொலி, முத்தாரம், மன்றம், தென்றல்'' உள்ளிட்ட இதழ்களில் எழுதினார். தமிழ் தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் வல்லமை பெற்றிருந்தார். பிரான்சு நாடு இவருக்கு இலக்கியத்திற்காக "செவாலியர்" விருது வழங்கி சிறப்பித்தது.

இவரது "விதவைக்கொரு செய்தி" என்ற கவிதை "திராவிட நாடு" இதழில் வெளிவந்து இவருக்குப் பெரும் புகழைப் பெற்றுத்தந்தது. தனிப்பாடல்கள் மட்டுமன்றி குறுங்காப்பியங்களையும் எழுதினார்.

"தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம்' எனும் குறுங்காப்பிய நூற்கள் வெளிவந்தன. இசைப்பாடல்களின் தொகுப்பான ''தொடுவானம்'' நூலில்

தனது இசை ஞானத்தை வெளிப்படுத்தி இருப்பார் கவிஞர். திரு.வி.க. இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார்

1956 ல் வெளிவந்த இவரது 88 பாடல்கள் அடங்கிய ''வாணிதாசன் கவிதைகள்'' கவிஞருக்கு மேலும் புகழ் சேர்த்தன. இந்நூல் இயற்கை, இன்பம், மக்கள், புரட்சி, தமிழ், பூக்காடு, இசைக்குரியார் உள்ளிட்ட ஏழு தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

பல்வேறு இதழ்களில் இவர் எழுதிய பொங்கல் வாழ்த்துப் பாடல்கள் தொகுக்கப்பட்டு "பொங்கல் பரிசு" என்ற நூலாக்கம் செய்யப்பட்டது. "தமிழ் - பிரெஞ்சு கையகர முதலி, தீர்த்த யாத்திரை, இன்ப இலக்கியம், எழிலோவியம், எழில் விருத்தம், குழந்தை இலக்கியம், பெரிய இடத்துச் செய்தி, சிரித்த நுணா, இரவு வரவில்லை" எனும் பல நூற்கள் படைத்துள்ளார்

பாட்டரங்குகள் பலவற்றில் இவர் பாடிய பாடல்களை இணைத்து "பாட்டரங்கப் பாடல்கள்'' என்ற நூலாக வெளிவந்தது. இயற்கை குறித்தும் நிறைய எழுதியதால் ''தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த்'' எனப் போற்றப்பட்டார். "கவிஞரேறு, பாவலர் மணி, புதுமைக் கவிஞர், உவமைக் கவிஞர், தமிழ்நாட்டுத் தாகூர்'' என்றெல்லாம் போற்றப்படுகிறார்.

தமிழக அரசு இவரது நூற்களை நாட்டுடைமை ஆக்கியுள்ளது. இவரது



கவிதைகள் உருது, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

புதுவை அரசு இவர் வாழ்ந்த சேலியமேட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு வாணிதாசனார் பெயரைச் சூட்டியுள்ளது. கவிஞரின் பிறந்தநாளை புதுவை அரசும், கலைப் பண்பாட்டுத் துறையும் இணைந்து அரசு விழாவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி வருகின்றது.

தனது வாழ்நாள் முழுவதும் இலக்கியத் தொண்டாற்றி வந்த நமது கவிஞரேறு 07. 08. 1974 ஆம் ஆண்டு தமது 59 வது வயதில் இயற்கை அடைந்தார். தமிழ் உலகு உள்ளவரை கவிஞரேறுவின் புகழ் வளர்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

*வாழ்க தமிழ்.
வளர்க வாணிதாசனார் புகழ்*



திருமதி. க. மலர்வாணி ஜெயராஜ்

# மணிக்கூ கவியின் இரு நூல்கள் வெளியீடு




விழாவாக இல்லாமல், வித்தியாசமான முறையில், எளிமையாக இலக்கிய ஆர்வலர்களின் மத்தியில் (16-08-2020) அன்று வெளியீடு கண்டிருக்கின்ற நூல் - ''வானும் மண்ணும் நம்வசமே...'' மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன் அவர்களின் இரண்டாவது நூல் இது.

இத்துடன் 01.02.2020 இல் தமிழகத்தின் சென்னை எழும்பூரில் தமிழ்நெஞ்சம் பலநூறு கவிஞர்கள், அறிஞர்கள் முன்னிலையில் வெளியீடு செய்த ''ஹைக்கூவில் கரைவோமா?'' நூலின் மறுபதிப்பும் வெளியீடு கண்டது. இவ்விரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வை புத்தொளி இலக்கியக் குழுமத்தினர் ஒருங்கிணைப்பு செய்திருந்தார்கள். இது இவர்களின் முதலாவது வெளியீட்டு நிகழ்வாகும்.

நூல் வெளியீட்டு நிகழ்வில்... ஜனாப் ACM சயீட் (ஓய்வுபெற்ற அதிபர்), ஜனாப் SA நசாக்(ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி), ஜனாப் K காலிதீன்(ஓய்வுபெற்ற அதிபர்), ஜனாப் மகாத் (அதிபர், அல்-முனீரா பாலிகா மகா வித்), ஜனாப் முகைதீன் (அதிபர், மாக்கான் மாக்கார் வித்), ஜனாப் முகமட் நஸீர் (திடீர் மரண விசாரணை அதிகாரி), ஏரூர் கவிமணி எம்ரிஎம் அன்சார், கவிதாயினி ஏரூர் ஜிப்ரியா, ஜனாப் SM அமீன், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஹைக்கூவில் கரைவோமா? நூலின் முதற் பிரதியினை ஓய்வுபெற்ற அதிபர் ஜனாப் ACM சயீட் வழங்கி வைக்க, ஓய்வுபெற்ற அதிபர் K காலிதீன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

வானும் மண்ணும் நம் வசமே.. நூலின் முதற் பிரதியினை ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி ஜனாப் SA நசாக் அவர்கள் வழங்கி வைக்க ஏரூர்க் கவிமணி எம்ரிஎம் அன்சார் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



## மதிப்புரை




நூல்கள் தேவைக்கு

+94 76 2710271
+94 77 1962247

இலங்கைக்கல்விப்புலத்தில் ஆசிரிய ராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாள ராகவும் பல்லாண்டுகள் பணிபுரிந்திருக்கின்ற நஸீறா ஆப்தீன், தேடல் மிகுந்தவர்.புதுமைவிரும்பி. புதிய இலக்கிய வடிவங்களைத் தேடிக் கற்பதிலும் ஆய்வு செய்வதிலும் மிகுந்த ஆர்வமுடையவர்.

தமிழில் வரவுப் பாவாக அங்கீ காரம் பெற்றிருக்கின்ற ஜப்பானிய ஹைக்கூவைத் தேடிக் கற்று, அதுபற்றிய தனது குறிப்புக்களை ''ஹைக்கூவில் கரைவோமா?''என்னும்தலைப்பில்நூலாகத் தந்து, ஈழத்தில் ஹைக்கூ தொடர்பில் சிறிய அளவிலான ஆய்வு நூல் தந்த முதலாமவராக உயர்ந்திருப்பவர் நஸீரா எஸ். ஆப்தீன். மேலும், மணிக்கவிக்கூ, விடுகவிக்கூ என இரண்டு புதிய வடிவங்களை தமிழகத்தில் அறிமுகம் செய்த இந்நூலாசிரியருக்கு தமிழ்நெஞ்சம் மணிக்கூக்கவி எனும் சிறப்பு விருதினை வழங்கி அங்கீகாரம் தந்து சிறப்பித்தது.

இப்பொழுது வெளியீடு கண்டிருக் கும் அவரின் ''வானும் மண்ணும் நம வசமே'' நூல் தன்முனைக் கவிதைத் தொகுதி. நானிலு என்ற தெலுங்கு கவிதை வடிவம், க.நா.கல்யாணசுந்தரம் போன்றோரால் தன்முனைக் கவிதையாக தமிழுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

நான்கு வரிகள், வரிக்கு அதிக பட்சம் மூன்று சொற்கள், வரிகளில் முதல் இரண்டு வரிகள் ஒருநிகழ்ச்சியை அல்லது காட்சியை புலப்படுத்துவதாக அமைய ஏனைய இரண்டு வரிகளும் முந்திய வரிகளோடு தொடர்புபட்ட சாதகமான விடயத்தையோ அல்லது முரண்பட்ட விடயத்தையோ தருவதாக தன்முனைப்பாக்கள் அமை யும். அந்த வகையில் இற்றை வரை நான்கு தன்முனைப் பாநூல்கள் வெளிவந்திருக்கின்றன. நஸீரா ஆப்தீனின் இந்த நூல் ஐந்தாவது தன்முனைப் பாநூல். ஈழத்தைப் பொறுத்தவரை இதுவே முதலாவது தன்முனைப் பாநூல்.

இந்நூல் 90 பக்கங்களில் 175 தன்முனைப்பாக்களோடுமலர்ந்திருக்கின்றது. அணிந்துரையை தன்முனைப் பாக்களின் தொடங்குனர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர் களும், மகிழ்ந்துரையை ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியநாதன் அவர்களும்,வாழ்த்துரையை ஏறாவூர் தாஹீர் அவர்களும் வழங்கி யிருக்கின்றனர்.

இனித் தன்முனைப் பாக்களின் தன்மையை அறிந்து கொள்ளும் விதத்தில் நூலிலிருந்து சில பாக்கள்

----

''பாடசாலை அதிபர்கள்
பணப்பை நிறைகிறது
ஏழைப் பெற்றாரிடம் பெறும்
அன்பளிப்புப் பணங்களால்.''

----

''அள்ளியே இடுகின்றார்
புள்ளிகளை ஆசிரியர்
அதிகாரி தன் பிள்ளைக்காய்
செய்தனுப்பிய ஒப்படைக்கு''

----

''பூக்காரியின் கூடையில்
அழகுள்ள மலர்ச்சரங்கள்
கலைந்து பறக்கின்றது
பூக்களின்றி அவள் கூந்தல்.

----

நூலின் விலை இலங்கை ரூபா 300/- மற்ற ஹைக்கூவில் கரைவோமா? நூலின் விலையும் 300/

ஆதரவாளர்கள் ஆசிரியருடன் தொடர்பு கொண்டு நூல்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

வரவுப் பா வடிவத்தைக் கையாண்டு சமூக அவலங்களையும் துணிவோடு வெளிச்சமிடுகின்ற மணிக்கூக்கவி நஸீரா எஸ் ஆப்தீன் பாராட்டப்பட வேண்டியவர் அவருக்கு நமது வாழ்த்துகள்!

மதிப்புரை :
**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

# தரணியெலாம் எங்கள் தாயகம்



மானிடம் வாழும்
மாண்புறும் வையகமெங்கும்
தாய்மை போற்றும் தரணியெலாம்
எங்கள் தாயகமே.!

அடுத்தவர் பசியாற உணவளித்து
காத்துநிற்கும் கருணை மனிதம்..
உறவுகளை உணர்வோடு மதிக்கும்
மகத்துவம் கொண்ட மானுடம்..
மூத்தோர் மகிழ்ந்திட
மதித்தொழுகும் பண்பொழுக்கம்
பெற்ற இளையோர்
வாழ்ந்திடும் தரணியெலாம்
எங்கள் தாயகம் !

கொள்ளை எண்ணம் இல்லாத
கொள்கை கொண்டவர்கள்..
மனிதம் பேணும் மானிடர்கள்
பெண்மையின் புனிதம் காத்திடும்
காவலர்கள் வாழும் தரணியெலாம்
எங்கள் தாயகமே !

கல்விக்கு கரம் கொடுத்து கருணைக்கு,
மனம் திறக்கும் உள்ளங்கள்..
பாசத்திற்கு அடிபணிந்து
பாசாங்கு செய்யாத உயிர்கள்
உறவாடும் தரணியெலாம்
எங்கள் தாயகமே !

தமிழை உணர்வுடன் உயிரென போற்றி
தமிழ் அன்னையின் மார்பில்
இலக்கண அமிர்தம் பருகிய
தமிழன் வாழும் தரணியெலாம்
எங்கள் தாயகமே !

பச்சைப் பசுமை பாய்விரித்து
படுத்துறங்கும் வீசும் தென்றலின்
இசையில் நெற்கதிர்கள்
பரத நாட்டியமாடும்.
கொட்டும் அருவியில்
சொட்டும் நீர் த்துளிகள்
சுவைத்திட சுகம் தரும்
தண்ணீரும் தாராளமாய்
அருளிடும் தரணியெலாம்
எங்கள் தாயகமே !

அரசனும் ஆண்டியும் கர்வமில்லாது
கலந்து வாழ்ந்திடும்
மக்களுக்காய் பணிசெய்திடும்
பொறுப்பை கடமையென செய்திடும்
தர்மமும், நீதியும் உயிரும் உடலும் என
போற்றிடும் அரசாங்கம்
ஆட்சிபுரியும் தரணியெலாம்
எங்கள் தாயகமே. !

கணவனை கண்ணெனமதித்தொழுகி
பெற்றவர்களைப் போற்றி,
பெற்றெடுத்த செல்வத்தைச்
சொல்லாலும், செயலாலும்
கருணை கொண்ட உள்ளத்தால்
கட்டித்தழுவும் பெண்மை கொண்டவள்
வாழும் தரணியெலாம்
எங்கள் தாயகமே !

கரம் கொண்டவளை காதல் உள்ளத்தின்
உச்சத்தில் உயிராய்ப் போற்றி
பத்து மாதம் பத்திரம் காத்து
பெற்றெடுத்த அன்னையின் பாதத்தில்
சுவனம் தேடிப் பணிசெய்யத் துடிக்கும்
பெண்மையின் மகத்துவம் பேணி நடக்கும்
வீரம் கொண்ட ஆண்மையின்
பாதம் பட்ட தரணியெலாம்
எங்கள் தாயகமே !

மண்ணும், பொன்னும் தாயென மதித்து
தாயகமாய் போற்றி தமிழ் ஒலியை
மொழியாய் முழங்கும் தரணியெலாம்
எங்கள் தாயகமே !

காத்தவூர்க்கவி
**எம்.பஹ்த் ஜுனைட்**
இலங்கை

# வெண் நிலவிலும்... உன் சாதனைகள்!

அறிவின் சிகரமாய் நீயிருப்பாய்.
அன்பால் எம்மை ஆளுமை செய்வாய்.

நேசங்கள் வளர்த்து, எம்
நெஞ்சங்களை நெசவு செய்வாய்.

நேர்மையாய் உழைத்து, நெடுஞ்
சோம்பலைத் தறிவு செய்வாய்.

உன்ன ழகுத் திருவுருவம்
இந்திரனின் வாசஸ்தலம் ஆனதென்ன?

உன் உள்ளுணர்வு யாவும்,
கலைமகள் தான் ஆட்சி செய்வதென்ன?

உன் பேச்சுக்கள் கவிதை நடை.
உன் தைரியமே உனைக் காக்கும் படை.

எல்லையற்ற உன் ஆற்றல்,
நாளை வானத்திலும் உன் பெயரை செதுக்கும்.

உன்னுயர் சிந்தனைகள், புத்தம் புது உலகையே படைக்கும்.
சுற்றும் பூமியுடன், தாரகைகள் உனக்காகக் கைகோர்க்கும்.

சூரிய மண்டலமே உனை வாழ்த்த அணி சேர்க்கும்.
விண்வெளியிலும் தேடலாம், உன் கால் தடங்கள்.

வெண் நிலவிலும் பதியப் படலாம் உன் சாதனைகள்;
வேற்றுக்கிரகத்திலும் கிடைக்கலாமுனக்குப் பெரும்பேறுகள்!

– வஃபீரா வஃபி

# மனைவிக்குத் தத்ரூபமாக சிலை வைத்த கணவர்

கர்நாடகாவில் தொழிலதிபர் ஒருவர் இறந்த தன் மனைவிக்கு மெழுகு சிலை வைத்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகாமாநிலம்பெல்லாரிமாவட்டம் கொப்பல் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஸ்ரீனிவாச குப்தா. இவரது மனைவி கடந்த சில வருடங்களுக்கு முன்பு தன் இரு மகள்களுடன் காரில் திருப்பதி சென்றுள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக இவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் ஸ்ரீனிவாச குப்தாவின் மனைவி மாதவிக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மனைவியின் இழப்பினால் மனம் வருந்திய சீனிவாச குப்தா தனது புதிய வீட்டில் மனைவியைப் போல மெழுகு சிலை ஒன்றை சோபாவில் அமர்ந்த நிலையில் இருப்பதுபோல செய்து தனது வீட்டு கூடத்தில் அமைத்துள்ளார். .அச்சு அசலாக தனது மனைவியின் முகச் சாயலுடன் இருந்த மெழுசிலைக்கு மனைவிக்கு பிடித்த பிங்க் நிற புடவை அணிவித்து அதனுடன் அமர்ந்து புகைப்படமெடுத்துக்கொண்டார் விபத்தில்சிக்கி சிறிய காயங்ளுடன் உயிர் பிழைத்த தனது இரண்டு மகள்களுடன்.

குப்தாவின் மனைவியே நேரில் வந்து குடும்பத்துடன் புதுமனை விழாவை கொண்டாடியது போல இருந்ததாக வியந்து பேச்ப்படுகிறது இதன் வீடியோ, புகைப் படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.



# செல்வி என்ற நர்ஸக்கா

நி. அமிருதீன்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் ஆய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சி



எம்மா இன்னிக்கி லீவு போட்டு வீட்ல இருமா

முடியாதும்மா... நிறைய கொரோனா பேசன்ட் இருக்காங்க

இன்னிக்கு ஒரு நாள் இந்த அம்மாவுக்காக லீவு போட்டுமா

முடியாதும்மா

இந்த அம்மாவுக்கு ஏதாவது ஆச்சுன்னா, தப்பு தப்பா பேசாத மா உனக்கு உடம்புக்கு ஒன்னும் இல்ல. கொஞ்சம் பிபி தான் அதிகமா இருக்கு. அப்படி உனக்கு ஏதாவது ஒன்னு ஆனாலும் இங்க ஒரு உசுரு, அங்க 18 உசுரு. எனக்கு அவங்கதான் ரொம்ப முக்கியம். வேளாவேளைக்கு கரெக்டா மாத்திரை போட்டுக்கோ. அடுப்பில் பால் சூடு பண்ணி வச்சிருக்கேன் எடுத்து குடிச்சுக்கோ. இட்லி போட்டு வச்சிருக்கேன் பால் தொட்டு சாப்பிட்டுக்கோ. நான் காலையில எட்டு மணிக்கு வந்துருவேன். பத்திரமா இரு, போயிட்டு வரேன்மா... என்றவாறு அம்மாவை திரும்பிக்கூட பார்க்காமல் செல்வி தனது ஸ்கூட்டரை கிளப்பினாள்.

ஸ்கூட்டர் மெயின் ரோட்டில் வேகமாக பறந்தது. அவள் மனமும் அம்மா ஞாபகத்தில் மூழ்கியது. நெஜமாவே அம்மாவுக்கு ஏதாவது ஆயிடுமா? சேச்சே அப்படி எல்லாம் ஆகாது, அம்மா என்னை எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வளத்தாங்க... அவளின் எண்ணங்கள் இருபது வருடங் களுக்கு முன் நடந்தவைகளை அசை போட்டுக் கொண்டிருந்தது.

செல்வி பெயருக்கேற்றபடி செல்வி ஆகவே இருந்தாள் திருமணம் ஆகியும் கூட. திருமணம் முடிந்து முதலிரவில் கணவன் குடித்துவிட்டு வந்து கலாட்டா செய்யவே, பெரிய சண்டையாகி இரவோடு இரவாக தாய் வீட்டுக்கு வந்துவிட்டாள் செல்வி. பலர் சமரசம் பேசினார்கள் எதுவும் உடன்படவில்லை பிறகு கணவன் இவளை பார்த்து ஒரு வார்த்தையை வீசினான். வெகுண்ட இவள் தாலியை கழட்டி சபை

முன்னால் வீசிவிட்டு வந்தவள், இன்றுவரை திருமணத்தைப் பற்றி யோசிக்கவே இல்லை. அப்படியே அவளைப் பார்த்து அவன் என்ன சொன்னான் தெரியுமா? பொட்டச்சிக்கு படிச்ச திமிரு... அதான் நடுராத்திரியில கட்டுன புருஷன விட்டுட்டு ஓடி போய்ட்டா ஓடுகாலி... இந்த பேச்சு அவள் காதில் நெடு நாட்கள் வரை ஒலித்துக்கொண்டே இருந்தது. பெண்களைப் படிக்க வைப்பார் களாம், பிறகு ஏன் படித்தாய்? படித்த திமிர் என்பார்களாம்... இந்த சமூகம் ஏன் இப்படி இருக்கிறது என்று எண்ணிக் கொள்வாள் செல்வி. 12ஆம் வகுப்பு முடிக்கும் போது அவளின் தந்தை மாரடைப்பால் மாண்டு போனார். அடுத்து கல்லூரிக் கனவுகளோடு காத்திருந்த செல்விக்கு அது பேரிடியாக இருந்தது. செல்வியின் தாய் வீட்டு வேலை செய்யப் போகும் இடத்தில் ஒரு பெண்மணி நர்சிங் கல்லூரியில் பேராசிரியையாக பணிபுரிந்து வந்தார். அவர் செல்வியின் நிலைமையைக் கண்டு அவளை நர்சிங் படிக்க வைத்தார்.

படிப்பு முடிந்து வேலைக்கு கிளம்பும் முன் அவளுக்கு ஒரு திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று அவளுடைய தாய் ஒரு புரோக்கரை பிடிக்க, அவனும் குடிகாரனை நல்ல மாப்பிள்ளை என்று செல்வி தலையில் கட்டிவிட்டான். பிறகு நடந்தது தான் உங்களுக்கு தெரியும். ஊர் ஆயிரம் பேசும் ஆனாலும் நம் வாழ்க்கையை வாழ்வது நாம்தான் என்று எண்ணிய செல்வி உடனடியாக பக்கத்து ஊரில் ஒரு மருத்துவமனையில் நர்சாக பணியில் சேர்ந்தாள்.

சில நாட்களில் வீட்டையும் அருகி லேயே குடி மாற்றினாள். புதிய மக்கள் புதிய வேலைகவலைகளை மறந்துநோயாளிகளுக்கு சிகிச்சை செய்ய ஆரம்பித்தாள். கிட்டதட்ட மூன்று வருடங்கள் கழிந்து இருக்கும். அரசு வேலைக்காக விண்ணப்பம் இட இவளது மதிப்பெண்களுக்கு வேலை எளிதாக கிடைத்துவிட்டது. இப்போது பெருந்துறை அரசு மருத்துவமனையில் செவிலியர். அருகிலேயே தங்குவதற்கு அரசு விடுதி என வாழ்க்கையே மாறிவிட்டது.

தாய் எப்போது திருமணப் பேச்சு எடுத்தாலும் எனக்கு திருமணமே வேண்டாம் உனக்கு நான் எனக்கு நீ அவ்வளவு தான் என் வாழ்க்கை என்று சொல்லிவிட்டு பேச்சை முடித்துக் கொள்வாள். ஒரு ஐந்தாறு வருடங்கள் ஓட அழகு நகரில் 2 சென்ட் இடம் வாங்கி சொந்தமாக வீடு கட்டிவிட்டாள். அந்த அழகு நகர் ஒரு மிடில்கிளாஸ் ஏரியா. இரண்டே தெருக்கள் அதில் 30 வீடுகள் அனைவரும் நர்ஸ்க்கா நர்ஸக்கா என்று செல்வியிடம் அன்பாக பழகினார்கள்.

செல்வியும் அவர்களுக்கு தேவை யான மருத்துவ ஆலோசனைகளை அவ்வப் போது தந்துகொண்டே இருப்பாள். அந்த தெருவில் செல்வி என்று சொன்னால் யாருக்கும் தெரியாது. நர்ஸ் அக்கா என்று சொன்னால் சின்ன பையன் கூட செல்வியை அடையாளம் காட்டி விடுவான். இப்படியாக செல்வி உடைய வாழ்க்கை போய்க்கொண்டிருக்க திடீரென்று ஒரு நாள் செல்வியின் தாய் மயங்கி விழுந்தாள். தீவிர பரிசோதனைக்கு பிறகு ரத்த அழுத்தம் சர்க்கரை போன்ற உபாதைகளால் இனி காலத்திற்கும் மருந்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும் என்று கூறிவிட்டார்கள். எனவே தாய் ஓய்வெடுக்க ஆரம்பித்துவிட்டாள்.

எங்கோ புறப்பட்ட கொரோனா இந்தியாவிலும் வந்துவிட இவள் மருத்துவ மனையிலும் 18 நோயாளிகள். அனைவர்களுக்கும் இன்று பரிசோதனை முடிவு வரப்போகிறது. நெகட்டிவ் என வந்துவிட்டால் நாளை முதல் இரண்டு நாட்கள்விடுமுறைஎடுத்துக்கொண்டுஅம்மா பக்கத்தில் இருக்கலாம் என்ற சிந்தனையை கலைத்துக் கொண்டு மருத்துவமனைக்குள் சென்றாள் செல்வி.

வேகமாக தன்னுடைய அறைக்குள் சென்று கொரோனா நோய் பாதுகாப்பு உடையை அணிந்து கொண்டு வார்டுக்குள்

சென்றாள். நோயாளிகளுக்கு மையமாக நின்று சத்தமாக பேச ஆரம்பித்தாள். மாலை உங்களுக்குரிசல்ட்வந்துவிடும்.கண்டிப்பாக உங்களுக்கு கொரோனா நோய் இருக்காது நீங்கள் நிம்மதியாக இருங்கள். நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள் என்று அவர்களை உற்சாகமூட்டினாள். அனைவரும் எப்போது மாலை நேரமாகும் என கடிகாரத்தை பார்த்தவாரே நேரத்தை கழித்துக் கொண்டிருந்தனர்.

மாலை 5 மணி ரிசல்ட் குறித்த இமெயிலை பிரிண்ட் அவுட் ஆக பிரிண்டர் வெளியே துப்பியது. அதை கையில் எடுத்துப் பார்த்த செல்விக்கு அவ்வளவு மகிழ்ச்சி. 18 பேருக்கும் கொரோனா நோயில்லை. வேகமாக தாளை எடுத்துக்கொண்டு வார்டுக்குள் நுழைய முற்பட்டவேளை அவளுடைய செல்போன் அழைத்தது எடுத்துப் பார்த்தாள். பக்கத்து வீட்டு மாமி நம்பர். உடனே ஏதோ ஆகிவிட்டது என நினைத்து போனைஆன் செய்தாள்.

செல்வி... உங்க அம்மா...

தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார் மாமி. செல்விக்கு எல்லாம் புரிந்துவிட்டது. கண்களில் கண்ணீரோடு வார்டுக்குள் நுழைந்து நோயாளிகளை பார்த்து, உங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. உங்களில் யாருக்கும் கொரோனாஇல்லைஎன்றமுடிவுவந்துள்ளது. இவ்வளவு நாள் நாம் பட்ட சிரமத்திற்கு பதில் கிடைத்துவிட்டது என்று சொல்லிவிட்டு அழ ஆரம்பித்தாள். நோயாளிகள் அனைவரும் எண்ணிக் கொண்டார்கள் இது நர்சின் ஆனந்தக் கண்ணீர் என்று. ஆனால் அவளுக்கு மட்டும்தான் தெரியும் இது தாய் இறந்ததினால் வந்த கவலையின் கண்ணீர். கடைசி நேரத்தில் தாயுடன் இருக்க முடியவில்லையே என்ற வேதனையின் கண்ணீர். செல்வி கொரோனாவை வென்றுவிட்டாள். ஆனால் தாயை இழந்து விட்டாள்... வாழ்க செவிலியர்களின் தியாகம்.



## யார் மீது எறியப்பட்ட கல்

இது
கண்ணீரால் கழுவப்படாத
பாவங்களை சுமக்கின்றது
தலைமேல் அழுத்தப்பட்ட
முள்கம்பியும்
தோள்மேல் சுமக்கின்ற சிலுவையும்
யாரோ ஒருவரின் இரத்தம்
தூய கிண்ணத்தில் பருகுகின்றோம்...

உங்களில் பாவம் செய்யாதவர்கள்
கல் எறியுங்கள்...
கண்ணீரால் கால்களை மட்டுமல்ல
பாவங்களையும்...
உங்கள் பாவங்களுக்காக
தேவ இரத்தம்
பலியிடப்படுகின்றது...

தலைமுறை தலைமுறையாக
அந்தக்கனி
ருசிப்பதை நிறுத்தும்வரை
பாவத்தின் பலி
தொடந்துகொண்டுதான் இருக்கிறது!

**- ஈழபாரதி**

# மௌனம்

மௌனம் என்பது
பேசாதிருத்தல் அல்ல.
பேசும் வார்த்தைகள்
பேசாது
தியானித்திருத்தல்.
இரவுக்குள் பகல்
மௌனமாய்ச்
சாய்வது போல்.

மௌனத்தை
வார்த்தைச் சாவி
திறக்கையில்
அதன் நகங்கள்
சத்தங்களைக் கீறி
எழச் செய்யும்.

மௌனம் எப்போதும்
நம்முள் பயணிக்கிறது
நாட்களைப் போல்
ஒரு நதியைப் போல்
ஒரு கவிதையைப் போல்.

**- அன்றிலன்**
குப்பிச்சிபுதூர்.

# தன்முனைக் கவிதைகள்



1. ஒன்றையொன்று
விழுங்கும் நிழல்களில்
எந்த நிழல்
என்னுடையது?

2. வெறுப்பின் முடிச்சினை
அவிழ்க்கத் தொடங்கினேன்.
பேரன்பின் வெளிச்சம்
மெல்லப் பரவியது!

3. ஞானம் தருபவைகள்
அனைத்தும் போதிமரமல்ல!
பெற்றவர்கள் அனைவரும்
புத்தரும் அல்ல!

**அன்புச்செல்வி சுப்புராஜூ**

# அன்பு

அசாதாரண வார்த்தையில்
ஆர்ப்பரிக்கிறாய் ஆழ்மனதில்

ஆழி அலைகளிலே
அலைகிறது என்மனமும்
அமைதியாய்

தேளாய் கொட்டினாலும்
தேனமுது தெவிட்டினாலும்
இன்னமுது படைத்தாலும்
இன்னல் பல தந்தாலும்

துடிக்கின்ற இதயத்தை
நிறுத்திட இயலாது

தூவானம் துவண்டாலும்
பூ மணம் மடிந்தாலும்
புன்னகைப் புதைந்தாலும்

பூத்திடுமே என் மனதில்
உன் நினைவு மத்தாப்பு

கார்மேகம் சிவந்தாலும்
கடுஞ்சினம் கொண்டாலும்
கல்லாய் மனம் போனாலும்
காத்திருப்பேன் சிலையாக

கரம்பிடித்த நாள் முதலாய்
வெண்மேகம் நானாக
செம்பரிதி நீயாக

பொருத்தமில்லா
இணையென்று
தூற்றுவோர் பலரிருக்க

பாவம் என்ன தெரியும்
அவர்களுக்கு
காதலின் கவிரசமும்
காட்டாறு கனியமுதும்

அட்சயபாத்திரமாய்
அன்பிருக்க
அள்ள அள்ள பெருகுமே!
கடுகளவும் சிறுகாதே!

**- சரவிபி ரோசிசந்திரா**

# கரியக் காதலி

நௌசாத் கான் லி

யோவ் என்னைய்யா... டியூட்டி பார்க்குறீங்க பெரிய தலைவலியா போச்சுய்யா சட்டு புட்டுன்னு என்ன ஏதுன்னு விசாரிச்சு பார்த்து கேஸை முடிக்க பாருங்கய்யா.

ஒண்ணு சொல்லுறேன்னு கோவிச்சுக்காதீங்க சார், நீங்க பெரிய அதிகாரி உங்கள மாதிரி ஆளுங்க சின்னவங்க எங்கள திட்ட முடியும், விரட்ட முடியும்.

இந்த கேஸோட சீரியஸ்னஸ் தெரிஞ்சிச்சுன்னா நீங்க சத்தியமா எங்கள திட்ட மாட்டீங்க. போஸ்ட் மார்ட்டம் பண்ண டாக்டரு கூட இது தற்கொலையா, விபத்தா, கொலையான்னு தலை, கால் புரியாம நிக்குறாரு. சாதாரண எஸ்.ஐ நான், இந்த கான்ஸ்டபிள் நாலு பேரை வச்சு என்ன சார் பண்ண முடியும். இருந்தாலும் வாங்குற சம்பளம் செரிக்குறதுக்காக மனசாட்சிக்கு விரோதமில்லாம உண்மையா தான் இந்த கேஸை விசாரிச்சோம் சார்.

ரயில் பெட்டி மாதிரி இந்த கேஸ் போய்க்கிட்டே இருக்கு எந்த ஒரு விஷயத்துக்கும் முதலும், முடிவும் இருக்கணும். இந்த கேஸுக்கு முதல் எது, முடிவு எதுன்னு சத்தியமா தெரியலை சார்.

ஆனா ஒண்ணு சார் இந்த கேஸ் இதோட முடியாது இது தொடரும்ன்னு என் உள்மனசு சொல்லுது.

இதுவரைக்கும் என்னதான் கண்டு பிடிச்சீங்க? கடைசியா செத்த பொண்ணு எம்.எல்.ஏ சொந்தக்கார பொண்ணு வேற அதான் பிரஷ்ஷர் அதிகமா இருக்குய்யா, வேலை வெட்டி இல்லாம உங்களை திட்டுறதுக்கு எனக்கு பைத்தியமாய்யா ??

உங்க ஹை பொசிஷனுக்குரிய பிரஷ்ஷர் எங்களால தாங்க முடியாது சார் இருந்தாலும் இந்த கேஸுக்காக நாங்க நிறைய உழைச்சு இருக்கோம் சார்.

முதல்ல செத்து போன ராகினி மரணத்துக்கும் இரண்டாவதா இறந்து போன அனிதா மரணத்துக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு சார்.

என்னய்யா சொல்லுற ?

ஆமாம் சார், ரெண்டு பேரோட மரணமும் இயற்கையா தெரிஞ்சாலும் அந்த பொண்ணுங்க இறந்த தேதி, இறந்த விதம் ஒரே மாதிரி இருக்கு சார் .



ராகினி ஜனவரி 13 ஆம் தேதி மின் கம்பி அறுந்து விழுந்து இறந்து போனா ரெண்டாவதா பிப்ரவரி 13 ஆம் தேதி பாத்ரூம்ல வாட்டர் ஹீட்டர்ல எர்த் லீக்காகி அனிதா இறந்து போனா.

ரெண்டு மரணங்களிலும் மின்சாரம் சம்பந்தப்பட்டு இருக்கு, இருவரின் உடல்களும் மரணத்திற்கு பிறகு கருப்பா மாறி இருந்தது

என்னய்யா விட்டலாச்சார்யா படக்

கதை சொல்லிக்கிட்டு இருக்க, ரெண்டு பேருமே மின்சாரம் தாக்கி இறந்திருக்காங்க அதனாலே ரெண்டு பேர் உடல்கள் கறுத் திருக்கலாம்

எத்தனையோ பேர் உடல் கருகி, மின்சாரம் தாக்கி இறந்திருக்கிறதை பார்த்திருக்கிறேன் சார் இது அது மாதிரியான மரணம் இல்லை அவங்க உடல் அசாதாரணமான நிலையில் ரொம்ப கொடூரமா கறுத்து இருந்தது .

போய்யா இதெல்லாம் ஒரு விஷயம்னு சொல்லிக்கிட்டு இருக்க .இன்னைக்கு மார்ச் 13 ஆம் தேதி நீ சொல்லுற படிபார்த்தா இன்னைக்கு ஒரு மரணம் விழுந்து இருக்கணுமே?

மேலதிகாரி சொல்லி முடிக்கவும் அப்போது அவரது மொபைல் போனில் அழைப்பு மணி ஒலிக்கிறது.

ஹலோ சார் இங்க குறுக்கு பேட்டை மூணாவது தெருவுல கேஸ் ஸ்டவ் வெடிச்சு ஒரு இருபது வயசு பொண்ணு ஸ்பாட் அவுட், அந்த பொண்ணோட உடல் ரொம்ப கொடூரமா கருகி இருக்கு ,என் லைப்ல இதுமாதிரியான மரணத்தை பார்க்கலை சார் என்றான் அந்த ஏரியா எஸ்.ஐ.நாகராஜன்

சம்பவ இடத்துக்கு எஸ்.ஐ. பழனியும், ஐ .ஜி.சிவலிங்கமும் சென்றனர். அந்த வீட்டில் நடந்தேறிய விபத்தை கண்டு அதிர்ந்து போயினர். அந்த வீட்டின் ஹாலுக்கு வரும் போது இறந்து போன பெண்ணின் புகைப்படத்தை கண்டு மீண்டும் அதிர்ச்சியடைந்தனர் ஏனென்றால் ஏற்கனவே இறந்து போன இரண்டு பெண்களோடு இந்த பெண்ணும் இணைந்து புகைப்படம் எடுத்திருந்தாள்.

கண்டிப்பாக இது விபத்தோ, தற்செயலாக நடந்ததோ இருக்காது சார் அந்த போட்டோவுல இருந்த நாலு பொண்ணுல மூணு பொண்ணு இறந்தாச்சு மீதம் உள்ள அந்த பொண்ணையாச்சும் காப்பாத்த பார்ப்போம் சார்.

கடைசியா உள்ள அந்த பொண் ணும் சாகத் தான் போறான்னு எப்படிய்யா உறுதியா சொல்லுற ?

இந்த தொடர் மரணங்களை பார்க் கும் போது சாதாரணமா தெரியலை சார் நம்ம அறிவுக்கு மீறிய அமானுஷ்ய விஷயமா தெரியுது.

இந்த தொடர் மரணங்கள் ஏற்படுற துக்கும் இந்த பொண்ணுங்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு சார். கடைசியா உள்ள அந்த பொண்ணை விசாரிச்சோம்ன்னா இப்ப நடந்துக்கிட்டு இருக்கிற மரணங் களுக்கு விடை தெரியலாம். அந்த பொண்ணையும் நம்மளால காப்பாத்த முடியும்.

சில வாரங்களுக்கு பிறகு/...

காலிங் பெல் ஒலி கேட்கவும் கதவை திறந்தாள் சாணக்யா.

குட் மார்னிங் மா நான் எஸ்.ஐ.பழனி

உங்ககிட்ட சில டெத் கேஸு விஷயமா விசாரிக்கணுமா?

ப்ளீஸ் உள்ளே வாங்க சார்.

நீங்க எந்த விஷயத்தையும் ஒளிவு, மறைவு இல்லாம சொன்னா தான் உங்களை யாவது காப்பாத்த முடியும்.

என்ன சார் சொல்றீங்க ?

உன் நண்பர்கள் மரணத்தில் எங்க காவல் துறைக்கு சந்தேகம் இருக்குமா, மூணு பேரோட மரணமும் விபத்து மாதிரி தெரிஞ்சாலும் எங்க அறிவுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு விஷயம் இந்த கேஸுல இருக்கு. மூணு பேரோட மரணமும் ஒவ்வொரு மாதத்தின் 13 ஆம் தேதி சொல்லி வச்ச மாதிரி நடக்குது. அவங்க மரணத்தில் நெருப்பு, மின்சாரம் சம்பந்தப்பட்டு இருக்கு.

போலீஸ் அப்படி சொல்லவும் சாணக்யா முகம் மாறியது. தன்னையும் அறியாமல் அழத் தொடங்கினாள் .

அழாம இந்த கேஸுக்கு ஹெல்ப் பண்ணுற மாதிரி உனக்கு தெரிஞ்ச விஷயம் ஏதாவது இருந்தா சொல்லுமா...

நான் சொல்லப் போற விஷயம் இந்த கேஸுக்கு சம்பந்தப்பட்டதான்னு தெரியாது சார். ஆனா எங்க நாலு பேரு மனசுல உறுத்திக்கிட்டு இருந்த விஷயம்.

இறந்து போன ராகினி, அனிதா ,சரண்யா அப்புறம் சாணக்யா ஆகிய நான் ஆகிய நால்வரும் சிறு வயதிலிருந்தே நல்ல நண்பர்கள். பள்ளி முதல் கல்லூரி வரை ஒண்ணா தான் படிச்சோம். நாங்க பைனல்

இயர் படிச்சப்ப அந்த காலேஜ் பர்ஸ்ட் இயர்-ல படிக்கிறதுக்காக கிராமத்துல இருந்து வைதேகின்னு ஒரு பொண்ணு வந்தா.தமிழ் அவ்வளவு அழகா,இனிமையா பேசுவா. ஆள் கருப்பா இருந்தாலும் அவள் முகம் களையாகவே இருக்கும். அவளை கருப்பி, கருப்பின்னு நாங்க கிண்டல் பண்ணாலும் சூரியன் தன் தோல் மீது காதல் கொண்டு தன்னை கருப்பாக்கி விட்டதால் தன்னை சூரியக் காதலி என பெருமை பட கூறுவாள். எத்தனை தடவை அவள டீசிங் பண்ணி இருக்கோம். ஆனா அவ எதுக்கும் கலங்கியது இல்லை அவ எதுக்கும் கலங்காம தில்லா நின்னது எங்களுக்கு என்னவோ போல் இருந்தது .

கிராமத்துல இருந்து வந்த அவளுக்கு என்ன அவ்வளவு திமிரு?

அவளுடைய குறைவான நிறத்தை வச்சு அவள அழ வச்சு வேடிக்கை பார்க்க ணும்னு நண்பர்கள் நாங்க முடிவு பண்ணோம்.

கிளாஸ்ல உள்ள ஒரு பையன சும்மானாச்சும் அவளை லவ் பண்ணுற மாதிரி நடிக்க சொன்னோம். எங்க விளையாட்டு ஒரு சில மாசத்துக்கு அப்புறம் வினையாச்சு .இந்த விஷயம் இவ்வளவு சீரியஸ் ஆகும்ன்னு யாருமே நினைச்சு கூட பார்க்கலை .

அந்த பையன் அவளை தினம், தினம் பாலோ பண்ணான். பொய்யான காதல் வசனம் ஒப்புவித்தான், நீ இல்



## சுற்றித் திரியும் என்பெயர்

நீ என்னை அழைத்ததில்
ஏனோ என் பெயருக்கு
இறக்கைகள் முளைத்துவிட்டது
நூலுக்குள் சிக்காத காற்றாடியாய்
இணையோடு பறக்கும் பறவையாய்
காற்றினில் மிதக்கும் கீதமாய்
நான் கூப்பிட்டும் கேளாமல்
சுற்றி திரிகிறது என் பெயர்.

**- விஜி**

லைன்னா நான் இல்லைன்னு உருகி உருகி பேசி அவள் இதயத்தை கரைக்க கபட நாடகம் தினம் தினம் பல நூறு அரங்கேற்றினான். எதற்கும் அவள் மசிவ தாய் தெரியவில்லை. ஒரு கட்டத்தில் அவளுக்காக இவன் தற்கொலை செய்வது போல ஒரு மிகப்பெரிய ட்ராமாவை நிகழ்த்தி அந்த அப்பாவி பெண்ணின் மனதில் இடம் பிடித்தான்.

ஒரு கட்டத்துல பொய்யா நடிச்ச அந்த பையனை வைதேகி உயிருக்குயிராய் காதலிக்க ஆரம்பிச்சா, அவன் காதல் நடிப்பென அறியாமல் அவனை உருகி ,உருகி காதலித்தாள் .

ஒரு நாள் அவனது பிறந்தநாளில் காதலின் சின்னமான தாஜ்மஹாலை பரிசளித்தாள் வைதேகி .அவனது பிறந்த நாளில் எங்க தோழியர்கள் முன்னிலையில் அவளது நிறத்தை மட்டம் தட்டி பேசியதோடு இதுவரை அவளை காதலித்தது எல்லாம் நாடகம் என்று போட்டுடைத்தது மட்டுமின்றி அவள் பரிசளித்த தாஜ்மஹாலையும் சுக்கு நூறாய் உடைத்தான்.

இந்த கருங்கோட்டானுக்கு வெள்ளைப் பையன் கேட்குதோ ?

போடி நீ சும்மா கூப்பிட்டா கூட வரமாட்டான் இதுல உனக்கு என்கூட காதல் கேட்குதோ. என் தோழிகள் சொன்னாளுங்கன்னு உன் கூட காதலிக்கிற மாதிரி நடிச்சேன்.

மனசுல ஆசைய வளர்த்துக்காம போய் படிக்கிற வேலைய பாரு. உனக்கு ஏத்தமாதிரி ஊர் நாட்டுல எவனாச்சும் சொட்டை தலையன் கிடைப்பான் அவன போய் கல்யாணம் பண்ணிக்கோ என்று சொல்லி சிரித்தான்.

அவள் வாழ்க்கையில் மனமுடைந்து முதன் முதலாய் அழுதாள். அவள் அழுகையை கண்டு தோழிகள் சிரித்து மகிழ்ந்தனர். இதெல்லாம் நாங்க அவனோடு சேர்ந்து நடத்திய நாடகம்ன்னு தெரிஞ்சு காலேஜ் மொட்டை மாடியில இருந்து விழுந்து வைதேகி தற்கொலை செஞ்சுகிட்டா .

எங்க பெற்றோர்கள் கொஞ்சம் பண வசதி படைத்தவர்கள் என்பதால் எல்லா இடத்திலும் பணத்தை கொடுத்து பூசி, மொழுகி அவ வயித்துவலி காரணமா தான் தற்கொலை பண்ணிக்கிட்டான்னு நம்ப வச்சுட்டாங்க .

அவ இறந்து கரெக்ட்டா ஒரு மாசம் கழிச்சு அவ இறந்த அதே 13 ஆம் தேதி அவளை லவ் பண்ணுற மாதிரி நடிச்ச அந்த பையன் எங்க காலேஜ் கெமிக்கல் லேப் வெடிச்சு அவன் மட்டும் இறந்து போனான் ஆனா நீங்க சொல்லுறத பார்த்தா ஒருவேளை வைதேகி ஆவி தான் எங்களை பழி வாங்குதோன்னு தோணுது சார்.

இது தற்செயலா நடந்ததா இருக்கும்மா இதுக்கு பேய், பிசாசுன்னு சினிமா போல கதை சொல்லுற...

அது எப்படி சார் ஒவ்வொரு மாசம் 13 ஆம் தேதி மட்டும் விபத்து ஏற்படும். எனக்கென்னவோ இதெல்லாம் வைதேகி ஆவி பண்ணுற வேலையா இருக்கும்ன்னு தோணுது சார்.

சரிம்மா கவலை படாதே இன்னைக்கு ஏப்ரல் 13 ஆம் தேதி இன்னைக்கு முழுதும் உன் கூடயே பாதுகாப்பா நானிருக்கேன் நீ கவலை படாதே.

சாணக்யா அந்த வைதேகி போட்டோ உன்கிட்ட இருக்கா?

இருக்கு சார் என்று சொல்லி மொபைலில் இருந்த வைதேகி புகைப்படத்தை காண்பித்தாள். நல்ல கருப்பு நிறம் என்றாலும் அவள் முகம் களையாக அந்த வானத்து நிலவு போல் வட்டமாக அழகாக இருந்தது.

IF U DO NOT MISTAKEN MA நான் ஸ்மோக் பண்ணிக்கலாமா ?

பரவாயில்லை சார் நீங்க சிகரெட் பிடிங்க

பழனி சிகரெட் பிடிக்க சிகார் லைட்டை அழுத்தவும் அதிலிருந்து வந்த பெரிய தீ அருகிலிருந்த சாணக்யா மீது பற்றியது. பழனி எவ்வளவு முயன்றும் அந்த தீயை அணைக்க முடியவில்லை.

அப்போது திடீரென மின்விளக்கு ஒரு செகண்ட் நின்று எரிந்தது அந்த இருளில் வைதேகியின் முகம் பிரகாசமாய் ஒளிர்ந்து மறைந்தது.



# குடும்பம் என்னும் குதூகலம்


ஆசையோடு ஈன்றெடுத்து அன்பாக உணவூட்டி
அள்ளி யணைத்து அனைத்தும் அறியவைத்து
துள்ளியே ஓடிநீ துடிப்போடு வென்றுவாவென
சொல்லியே சுறுசுறுப்பாக்கும் சுற்றம்சூழக் குடும்பம்.!

அன்பும் உறவும் பின்னிப் பிணைந்திட
பாசமும் நேசமும் பொங்கி வழிந்திட
இன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்திட
வாழ்வினி லென்றுமே வசந்தமாகும் குடும்பம்.!



சூழ்கின்ற துன்பம் சுடராகும் நொடிதனில்
வாழ்கின்ற உறவுகள் வந்துதிர்த்த வார்த்தைகளால்
வீழ்கின்ற நிலைமாற்றி வியப்பாகி யெந்நாளும்
தாழ்வில்லா தமிழ்போலத் தழைத்திடும் குதூகலம்.!

விண்தந்த ஒளியாக வீட்டினில் மகிழ்விருக்கும்
பண்சுமந்த கவிபோல பரவசம் நிறைந்திருக்கும்
மண்ணகத்து மகிழ்வுகளும் மதிப்பானக் குடும்பத்திலே
கண்சுமந்த காட்சிக்குள் கருணை மழைபொழியும்.!



பெருமையுடன் பெற்றதுவே பிறவிப் பயனாக
அருமை யுறவுகள் அகத்திரையி லென்னாளும்
உருவாகி உள்ளத்துள் உயிராகப் பரிவாகப்
பெருமனது மகிழ்வாகப் பெற்றிடுமே குதூகலம்.!

வரமாகும் வாழ்வினிலே வந்துதித்த உறவுகளால்
சிறந்தோங்கி சீராக சிறப்புடனே வாழ்வெல்லாம்
மறவாத பண்பினாலே மகிழ்வாகி நிறைவாகி
இறவாதப் புகழோடு இயங்கிடுமே நற்குடும்பம்.!

**நிறைமதி நீலமேகம்,**
பெண்ணாடம்.

# ஹைக்கூ

தெருத்தெருவாய் அலைகிறாள் அவள்!
நாய்களுக்கான
சோற்றுப்பொட்டலங்களோடு...!

நடப்பை சொல்லியழுகிறாள் அவள்!
யாரும் காதுகொடுத்து கேட்கவில்லை
எழவு வீட்டில்...!

ஆன்லைன் வகுப்புகள் நடக்கிறது!
புரியாமல் விழிக்கிறார்கள் பெற்றோர்கள்
கல்விக்கட்டணம் கட்டும் வழி...!

ஞாயிறு முழு ஊரடங்கு...!
துவக்கி வைக்கிறது
ஒரு பெரும் மழை...!

முதலில் இருந்தது
பணி ஓய்விற்குப்பின் கடைசியாகிப்போனது
மரியாதை!!

அதுவும் அன்புதான்!
வேறு பெயரில் வெளிப்படுகிறது
அப்பாக்களிடமிருந்து கோபமாய்!

பரிச்சயமாகிவிட்டேன் போல!
முன்புபோல இப்பொழுதெல்லாம்
குரைப்பதில்லை...!

அமேசானில் அமோகவிற்பனை!
ரூபாய் முன்னூறுக்கு இருபது
உருப்படி வறட்டி...!

கோமியம் புனிதமாம்!
சொல்கிறார்கள் கறவைமுடிந்ததும்
அறுப்புக்கு அனுப்பியவர்கள்...!

மனநல மருத்துவமனை!
அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார்
சுவற்றிடம்...!

காதலனோடு ஓடிப்போன மகள்
திருந்தி திரும்பி வந்திருக்கிறாள்!
கர்ப்பப்பையில் கருவோடு!

வேலியே பயிரை மேய்கிறது!
காவல்நிலையங்களிலும்
சிறைச்சாலைகளிலும்...!



**மகிழை. சிவகார்த்தி,**
புறத்தாக்குடி,

# கவிதையாய் ஒரு கதை

செவத்தி எம்பேரு.
குட்டியா இருந்தப்ப
இந்த கசாப்புக்கடை
காளியண்ணன்
காசை கொடுத்து
வாங்கியாந்தான்...!
வந்த இடத்துல
வசதி கொஞ்சம் அதிகந்தான்.
என்னோடு சேர்த்தாக்க
இருந்தது பல ஆடு...!
நாளுக்கு ஒண்ணுன்னு
ஒவ்வொன்னா பலியாகும்..!

குட்டியா இருந்ததாலே
நானுந்தான் தப்பிச்சேன்.
காளியண்ணன் பிள்ளைக்கு
நானுன்னா செல்லந்தான்..!
கீரைக்கட்டு... கத்திரிக்காய்
கூடுதலாவே எனக்கு
தின்னத்தான் தருவாக...!

எங்க கூட்டத்துல
கருப்பன்னு ஒரு கிடா
பாக்கவே பயமுறுத்தும்...!
கூட்டத்துக்கு மைனராட்டம்
தெனாவட்டாதான் திரியும்..!
பலதுக்கும் அதுகிட்டே
நெறையவே பயமுண்டு..!
சந்தடி சாக்கிலே
பல ஆட்டை சீரழிக்கும்..!
வச்ச குலையெல்லாம்
வகையாய் தின்னுகிட்டு
திமிராய்தான் நடந்துக்கும்..!
என்னோட வாழ்க்கையும்
அது கிட்ட பலியாச்சு...!

அய்யனாரு கோவிலிலே
ஆடித் திருவிழான்னு
அள்ளிக்கிட்டு போனாங்க
கருப்பனையும் ஒரு நாளு...!

அதோட குட்டிய சுமந்துகிட்டு
சினையாகி நான் நின்னேன்.
குட்டியும் பிறந்தாச்சுன்னா
அத்தோட என் பிழைப்பும்
அறுபட்டு போயிடும்..
ஞாயிறுக்கோ...
புதனுக்கோ...!!



**- அனுராஜ்**



# ஆட்டம்

**ம.சக்திவேலாயுதம்**
திருநெல்வேலி

இதே ஊரில் கடந்த ஆண்டும் ஆடினோம்.

நாங்கள் ஆடிக் கொண்டிருந்தோம். நாதஸ்வரத்தில் கிராமிய இசையை.

எங்கள் குழுவின் கம்பன் வாசிக்க, இளங்கோ தவில் அடிக்க, காளையின் சிங்கியில் நாங்கள் ஆட, மக்கள் ரசிக்க எங்கள் பின்னால் சப்பர பவனியில் அம்பாள் கம்பீரமாய் உலா வந்தாள்.

எட்டு வீதிகள் அவ்வூரில் இருந்தன. பெரிய வீதிகள் ஐந்து. சிறிய வீதிகள் மூன்று. ஒவ்வொரு வீதிக்கும் இரு பெரிய தலைகள். அவர்கள் வீட்டின் முன்னே குறைந்தது மூன்று நிமிடமாவது ஒரு பாடல் பாடி நாங்கள் ஆட வேண்டும்.

இரண்டாவது பெரிய வீதியில் ஒரு பெரியதலைக்கட்டுவீட்டுவாசலில்நானும் ப்ரியாவும் பாடிக்கொண்டே ஆடினோம். அப்போது அந்த தலைக்கட்டின் பார்வை ப்ரியாவின் மேல் விழுந்தது.


இதை நான் பார்த்துக் கொண்டேன். ஆனால் பிரியா பார்க்கவில்லை. அந்த தலைக்கட்டின் பார்வையில் காமம் வழிந்தது எனக்கு மட்டுமே புரிந்தது. எங்களை ஏற்பாடு செய்து இங்கே கூட்டி வந்த அமைப்பாளரிடம் தலைக்கட்டு பேசினார்.

அவரும் “சரி சரி என்றும், நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றும் சொன்னார்.

பிரியாவை அழைத்து.. அவளது அவளது சட்டையில் நூறு ரூபாயை குத்தினார். பிரியாவுக்கு தன் கலைக்கு கிடைத்த மதிப்பு அந்த 100 என்று மகிழ்ந்தாள். எனக்குத் தெரியும் அது கலைக்காக குத்தப்பட்டது அல்ல என்று,

ஊரில் சிலரோ எங்கள் கலையை ரசித்தாலும் எங்கள் உடம்பை ரசிக்கவே சிலர் அங்குமிங்குமாக எங்களை பின் தொடர்ந்தனர்.

எங்கள் ஆட்டம் முடிவுற்றது. சப்பர பவனி நிறைவுற்றது. நாங்கள் ஊருக்கு எல்லைப்பகுதியில் உள்ள பள்ளிக்கூடத்தின் தாழ்வாரத்திற்கு கிளம்பினோம். அமைப் பாளரும் எங்களோடு வந்தார்.



## வண்ணத்துப்பூச்சியே!

உனது கால்கள் பூவின் இதழ்மேல்
ஒருவருக்குமே வலியில்லை – உன்
உறுஞ்சும் குழலில் உயிராய் நறுந்தேன்
உனக்கும் அதன்சுவை பெரிதில்லை.

கனவாய் நடக்கும் இந்த நிகழ்வினால்
கருவுறும் புதுமையும் நடக்கிறது – உன்
கால்கள் படுகின்ற இடமெல் லாமும்
கலக்கும் மகரந்தம் துடிக்கிறது.

ஒட்டிக் கொண்டு உயரே சென்று
உலகில் வேறிடம் அமர்கிறது – அதன்
உயர்வால் தாவரம் உடனே பரவி
உண்மையில் வனமே பிறக்கிறது.

எட்டி இருக்கும் எந்தக் கண்ணுக்கும்
எழிலாம் வண்ணம் தெரிகிறது – நீ
இயற்கை வண்ணப் பூச்சி என்பதை
இதயம் உணர்ந்து சிலிர்க்கிறது.

இயற்கை செழித்தால் எல்லாம் நடக்கும்
இதுதான் உலகின் வாழ்க்கை நெறி – நாம்
இமயம் அளவில் உயர்ந்து விடுவோம்
இன்னும் சிறப்பாய்ச் சிறகைவிரி!

**நீரை அத்திப்பூ**



பள்ளியை அடைந்தோம்.

‘‘அம்மா கண்ணகி... நாளைக்கு காலையில நீங்க ஊருக்கு கிளம்ப வேணாம். நாளை மறுநாள் இன்னொரு கோயில் விசேஷம் இருக்கு.. அதுக்கும் சப்பரம் வருது. அதனால நீங்க இங்கேயே இருங்க’’ மூணு நாள் சாப்பாட்டுக்கும் வருமானத்துக்கும் நான் பொறுப்பு’’ என அமைப்பாளர் சொல்ல,

‘‘சரிங்க சார்’’ என்று மகிழ்ச்சியோடு நான் சொன்னேன் இருந்தாலும் ஒரு சலனம் மனதுக்குள் இருந்தது.

‘‘சந்தோசம்மா.. அந்த ரெண்டாவது தெரு பெரிய தலைக்கட்டு பாப்பாவோட ஆட்டத்தைப் பார்த்து பிரமிச்சு புகழ்ந்தாரு’’ என அமைப்பாளர் சொல்ல... எனக்குள் உருவான சலனம் பதற்றத்தை ஏற்படுத்தியது.

‘‘சரிம்மா காலைல நான் வரேன் சாப்பாடு ஏற்பாடு பண்ணிட்டு வரேன்’’ என்று கிளம்பினார் அமைப்பாளர்.

எங்கள் குழுவில் மொத்தம் ஐவர். கம்பருக்கு வயது 55. இளங்கோ இன்னும் முதியவர். காளையோ பெயரில் மட்டுமே காளையாக அவரும் முதியவரே. பிரியா மட்டுமே இளஞ்சிட்டு. அவளும் தன்னை மாற்றிக்கொண்டவள். எனக்கு ஒரு 47 வயது இருக்கும்.

பிரியாவை இந்த உலகமே ஒதுக்கி வைத்து பிழையாகப் பார்த்தாலும் எங்கள் குழு அவளைத் தன் பிள்ளையாகவே பார்த்தது. ஆம் பிரியா எங்கள் குழுவில் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் இருக்கும்.

நேர்த்தியான ஆட்டத்தையும் நளினத்தையும் அவள் என்னிடமிருந்து கற்றுக் கொண்டாள். உலகம் எங்கள் கலையை மதிப்பது கொஞ்சம்தான். அந்தக் கொஞ்சத்தால்தான் எங்கள் வாழ்க்கை பிழைப்பு இன்றளவும் ஓடிக்கொண்டிருக்கிறது.

‘‘பிரியா ரொம்ப கவனமா இருக்க

னும்மா.. இங்க'' என நான் சொல்ல...

''ஏம்மா இத திடீர்னு சொல்றீங்க'' என்று அவள் கேட்க..

''உன் சட்டையில ஒரு நூறு ரூபா குத்தினாரே.. அந்தப் பெரிய மனுஷன் அவன் பார்வை சரியில்லம்மா'' என்றேன்.

''அப்படியா மா நான் கவனமா இருக்கேன்'' என்றாள்.

பொழுது விடிந்தது. தேனீர் உணவு என்று அனைத்துமே எங்களை தேடி வந்தது. அன்றைய நாள் மகிழ்ச்சியோடு ஓடிக்கொண்டிருந்தது. நாங்கள் பயிற்சியில் ஆடிக்கொண்டிருந்தோம். கும்பம் வைத்தும் கும்பம் வைக்காமலும் பிரியாவும் நானும் சிறப்பாக பயிற்சி செய்தோம்.

அன்றைய இரவுப் பொழுதும் வந்திடவே அமைப்பாளர் உணவோடு எங்களை சந்தித்தார்.

''கண்ணு பிரியா கண்ணு, உன்னை இந்த இரண்டாம் தெரு பெரிய தலைக் கட்டு பாக்கணும்னு சொன்னார் வந்திருக்கிறார் அந்த வாசல்ல நிக்காரு பாரு'' என அமைப்பாளர் அழைக்க...

நான் ''இப்போ எதுக்கு சார் வந்திருக்காரு'' என்றேன்.

பிரியாவும் பயத்தோடு ''எதுக்கு சார்'' என்றார்.

''ஒண்ணுமில்லம்மா சும்மா தான் போய் பாரு'' என்று பிரியாவிடம் பதில் சொன்னார் அமைப்பாளர்.

''நீங்க இருங்க கண்ணகி அம்மா அவ போயிட்டு வருவா'' என என்னைப் பார்த்து சொன்னார்.

''எனக்கானா ஒரே படபடப்பு அந்தப் பெரிய மனுஷன் எதுவும் பிரியாவை செய்திடக் கூடாது என்ற நினைப்பு''.

பிரியா வாசலுக்கு சென்றாள்.

''வாம்மா காரில ஏறு'' என பெரிய மனுஷன் சொல்ல ''எதுக்கு'' என்று பிரியா கேட்க...

''ஒண்ணுமில்லம்மா ஏறு'' என்றார்.

அச்சத்தில் பிரியா ஏற மறுத்தார். நாங்கள் நால்வரும் வாசலுக்கு விரைந்தோம்.

''இவங்க எல்லாத்தையும் கட்டிப் போடுங்கடா'' என தன் பணியாட்களுக்கு தலைக்கட்டு ஆணையிட அவர்கள் கம்பனையும் இளங்கோவையும், காளையையும் கட்டிப் போட்டனர்.

---

# இறைவா..!



பெயருக்குமுன்னால்
திருபோட்டுஎழுதுகிற
மனிதனைபடைக்கா நீ
மாபெரும்குற்றவாளி...!

நெற்றிகண்காட்டினாலும்
குற்றம்குற்றமென்னும்
நக்கீரன்படைத்தாய்
நக்கீரன்கள் படைத்தாயோ...?

அன்பேசிவமென
மேடையில்முழக்கமிட்டு
துன்பம்செய்யும்பாவிக்கு
தூக்கு எப்போது....?

**குரும்பல்பொன்கிபாரதி**
மணலி - 610203

என் அருகே வந்ததும் ''சட்டென'' அவர்கள் கன்னத்தில் நான் அடித்தேன்.

பெரிய மனுஷன் ''உடனே இவளை யும் கார்ல ஏத்துங்க''... என என்னை பார்த்தபடியே, கொஞ்சம் அதிர்ந்த குரலோடு "வண்டில ஏறுடி கும்பக்குடக்காரி" பிரியாவைப் பார்த்துத் திட்டினார்.

எங்கள் கைகால்களையும் முதலில் கட்டினர். பின்பு வாயையும் கட்டினர். இப்போது அந்த வண்டியை ஊருக்கு ஒதுக்குப் புறம் உள்ள முட்புதருக்குள் செல்கிறது.

இப்போது அந்த முட்புதரில் அருகே ஒரு மரத்தடியில் நாங்கள் கிடத்தப் படுகிறோம்.

எங்கள் இருவரின் கால்கட்டுகள் மட்டும் அவிழ்க்கப்படுகின்றன. இப்போது பெரிய மனுஷன் கூட வந்த அவரது பணியாட்கள் அனுப்பப்படுகின்றனர்.

வலுக்கட்டாயமாக எங்கள் ஆடை கள் உருவப்படுகின்றன.


''முதல்ல உன்னை வச்சிக் கிறேன் அடுத்து வந்து அவள பாத்துக்குறேன்'' என என்னைப் பார்த்தார் அந்த பெரியமனுஷன்.

பிரியாவின் உடம்பை பார்த் ததும் அதிர்ந்து போனான் அந்த பெரிய மனுஷன். இருந் தாலும்சபலத்தில்வாயிலிருந்த துணியை நீக்கிவிட்டு "ச்சீ பேடியா நீ..உன்னை ஏதாவது செய்யவேண்டும்'' என்று பிரியாவிடம் கத்தினான்.

''யோவ் என்ன விடுய்யா நானே இந்த சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டு ஒரு அனாதையா இந்த குழுவில வந்து சேர்ந்திருக்கேன்'' எனக் கதறினாள் ப்ரியா.

இப்போது அவன் பார்வை என் பக்கம் திரும்பியது. "நீயாவது பொண்ணா இல்ல ஒம்போதோ" எனக் கேட்டுவிட்டு என் ஆடை யையும் அவன் அவிழ் த்தான். இப்போதும் அவனுக்கு அதிர்ச்சி. நான் ஒரு ஆண் என்று பார்த்து புரிந்துகொண்டான்.

''உன்னையும் ஒன்னும் செய்ய முடியாது போய்த் தொலைங்க சனியன்ங்களே'' என்றதும், அவள் அருகே



ஓவியம் A. செல்வம்

உள்ள உடைந்த துண்டு பாட்டிலால் அவனை கிழிக்க பிரியா ஓடிவர... ''வேணாம் பிரியா வேணாம்'' என்றேன்.

பெரிய மனுஷனும் அச்சத்தில் உயிர் பிச்சை கேட்டான். ஓடிவிடு என்றோம்.

உயிர்ப்பிச்சை அளித்தோம். ஓடினான் அவன்.

ரோஜா பூக்களை கசக்கி எறிந்தால் எப்படி அதன் இதழ்கள் சிதறி கிடக்குமோ அதுபோலத்தான் அவளும் நானும் அந்த முட்புதரில் கிடந்தோம்.

''அண்ணா நான் தவறு செய்தால் எனது ஒட்டுமொத்த இனத்தையே தவறு என்கிறார்கள்? அதே போல் இங்கு ஒரு ஆண் தவறு இழைத்து இருக்கிறான். அதனால் ஒட்டுமொத்த ஆணினமும் தவறானவர்கள் என்று நான் சொல்ல முடியுமா'' என கேள்வியை என் முன்னே வைத்தாள்.

''தங்களைப் போன்றவர்கள் தான் இன்றும் எங்கள் இனம் வாழ்கிறது என்று எனது காலில் விழுந்தாள்'' பிரியா.

''போலீஸ் ஸ்டேஷன் வேண்டு மானால் போவோமா அண்ணா'' என்றாள் பிரியா.

''அதெல்லாம் வேணாம்மா... இதே மாதிரி எனக்கு நிறைய முறை நடந்திருக்கு என கண்ணீர் வடித்தேன்''

இப்போது அவளுக்கு நான் ஆதரவாக. எனக்கு அவள் ஆதரவாக...

''கலைகளை கலைகளாக பார்க்கும் மனங்கள் இருக்கும்வரை நாம் இணைந்தே வாழ்வோம் பிரியா என அவ்வூரை விட்டு கிளம்பினோம்'' நாங்கள்.

அப்படியானால் இந்த முட்புதர் களையும் காம முகமூடிகளையும் நாம் எப்போது கிழிக்க முடியும் என்ற கேள்வி மட்டும் எனக்குள்ளும் பிரியாவுக் குள்ளும் கேட்கப்படுவது உங்களுக்கும் கேட்கிறதுதானே! ■

---



விழிமூடும் போதும் உன்னை
பிரியாமல் நான் இருப்பேன்
கனவுக்குள் காவல் இருப்பேன்..

நான் என்றால் நானே இல்லை
நீதானே நானாய் ஆனேன்..
நீ அழுதால் நான் துடிப்பேன்..

உனக்கென இருப்பேன்
உயிரையும் கொடுப்பேன்..
உன்னை நான் பிரிந்தால்
உனக்கு முன் இறப்பேன்.

**நா.முத்துக்குமார்**



# பூக்களைத் தீண்டும் காமம்

நோக்கம் புனிதமானது காதல் உணர்வில்
ஆக்கம் அன்பின் இதயப் பிணைப்பல்லவா
ஊக்கம் உணர்வுகளின் தன்மை அறியவே
தேக்கம் இல்லாப் புரிதல்களே அடிப்படை

காதலின் பின்னே வருவதாயிருக்கும் காமம்
மோதலின்றி முகிழ்ந்த நேரத்தில் இருக்கும்
ஊதல் காற்றிலும் பொறுமை கடைப்பிடிக்கும்
காதலிலும் காமத்திலும் வரைமுறை இருக்கும்

வேலையற்ற வீணரின் வெறித்தனத் தாகம்
சாலை சோலையென்ற மாறுபாடு அறியாது
சேலை பால்மாற்றம் பிஞ்சானாலும் சரியாம்
ஊளையிடும் ஓநாயாய்ப் பாய்ந்திடும் பாவிகள்

பெண் என்றிருந்தாலே பேதலிக்கும் பேடிகள்
பெண்மை என்னவென்றறியா மூடப் பிறப்புகள்
பண்பின்றி காமவெறியில் கருத்தழிந்த மூடராய்
கண்ணின்றி பிஞ்சுகளைச் சிதைப்பது கொடுமை

மாக்களாய் மாண்பின்றி அறங்கெட்டு காமத்தில்
ஈக்களாய் மொய்க்கின்றனர் மென் மலர்களில்
கூக்குரலிடவும் அறியாக் குழந்தைகள் பாவம்
பூக்களைத் தீண்டும் காமம் பொசுங்கட்டுமே.

**கவிஞர் ராம்க்ருஷ்**





# பேராசைகள் !

ஆயிர மாயிர மாசைகள் உள்ளத்தில்
ஆடுதே தேடுதே கூடுமோ கனவிலும்!
உயிரிலே கலந்திட்ட கனவாய் விளையுதே!
உலகையே வென்றிடும் உவகையும் தருகுதே!
குறுகுறு வென நடந்திடும் குழந்தையாய்ப்
புழுதியிற் புரண்டிட தவழ்ந்திட எண்ணுதே!
அதற்கும் முன்னே!... அன்னையின் கருவிலே
அமிழ்தத்துள் மூழ்கியே மிதந்திட ஏங்குதே!

இளமையின் களிப்பிலே நிரந்தர உருவிலே
இனிவருங் காலங்கள் கழித்திட விரும்புதே!
நோயிலே நொடித்திடாச் சுகமுடன் தொடர்ந்திடும்
நீண்டதாய் ஆயுளும் வாழ்ந்திட வேண்டுதே!
நிதமொரு பளிங்கு மாளிகை கட்டி
நிலவிலே தனிமையில் வாழ்ந்திடத் தோன்றுதே!
நாட்டிலே நீதியை நாட்டிடும் அரசினால்
நன்மைகள் மக்களும் பெற்றிட வாழ்வரோ!

கூரிய சொற்களால் மனத்தினைக் கிழித்திடும்
கூற்றுவர் போன்றவர் திருந்தியே விடுவரோ!
பசியிலே பிணியிலே தினந்தினம் வலியுடன்
புவியிலே வாழ்பவர் வருத்தமும் மாறுமோ!
சிகரத்தின் உயரமாய் தெரியுதே ஆசைகள்
சிந்தனைத் தோட்டத்தில் மலருதே கவிதைகள்
துயரமும் மலையென தெறித்தே தகர்ந்திடும்
தூக்கமும் தொலைத்து விழித்தெழும் நாளிலே!



**கோகிலா பொலிகை**
பிரான்சு



Dr. ஃபஜிலா ஆசாத்
(International Life Coach - Mentor - Facilitator)

**மகிழ்ச்சிக்கான தேடலின்**
**தவிர்க்க முடியாத ஒரு அங்கமே நிராகரிப்பு**

– போ. பென்னெட்

# நிராகரிப்பு

மீண்டும் ஒரு முறை அவன் தான் எழுதிய கதையை எடுத்து வாசித்துப் பார்க்கிறான். அவனுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. எழுதியது தான்தானா என வியப்பாக கூட இருக்கிறது. மிக அருமையாக வந்திருக்கிறது. நிச்சயம் இது பல பரிசுகளை தனக்கு பெற்றுத் தரக் கூடும் அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மிக்க தன்னம்பிக்கையோடு அந்த பிரசுரத்திடம் தன்னுடைய கதையை கொடுக்கிறான். ஆனால் அது சுவற்றில் அடித்த பந்து போல பல விமர்சனங்களோடு பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளாமல் அவர்களால் நிராகரிக்கப் படுகிறது. அவன் சோர்ந்து போகிறான். அவன் நம்பிக்கை எல்லாம் சுக்கு நூறாக உடைவதை அவனால் உணர முடிகிறது.

அந்த அலுவகத்தில் அல்லும் பகலும் உழைத்து சர்வதேச அளவிலான தன் பிராஜக்டை அவன் தன் மேலதிகாரியிடம் போய் கொடுக்கிறான். ஏதோ காரணம் சொல்லி அது ஏற்றுக் கொள்ளப் படாமல் அவனிடமே திருப்பித் தரப்படுகிறது. அவன் மனம் எதையோ இழந்ததை போல் தாழ்வு மனப்பான்மையில் உழல்கிறது. இது போன்ற நிகழ்வுகளைப் பற்றி மேலும் பார்ப்பதற்கு முன்னால் உங்களிடம் ஒரு கேள்வி. நீங்கள் நிராகரிக்கப் பட்டிருக்கிறீர்களா?

நிச்சயம் அனைவருமே ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நிராகரிப்பை அனுபவித்திருப்பீர்கள். ஆனால் அது வெற்றியை நோக்கிய ஒரு மைல்கல் என்பதை மட்டும் பெரும்பாலும் பலரும் உணர்ந்திருக்க மாட்டார்கள். உண்மையில் நிராகரிப்பை சரியான கோணத்தில் புரிந்து கொள்ளத் தெரிந்தவர்களுக்கு அது ஒரு வரம்.

ஓர்லாண்டோவில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியின் ஆசிரியை அன்று வகுப்பிற்கு வரும்போது

கை நிறைய பரிசுப் பொருட்களுடன் வருகிறார். ஆவலாகப் பார்க்கும் சிறுவர்களைப் பார்த்து அவர்கள் ஒவ்வொருவராக முன்னால் வந்து யாராவது ஒருசிறுவனைப்பற்றிஅவனிடம்உள்ளசிறந்த குணங்களைப் புகழ்ந்து கூற வேண்டும் என்று சொல்கிறார். முன்னால் வரும் சிறுவன் யாரைப் புகழ்ந்து சொல்கிறானோ அந்த சிறுவனை அழைத்து ஒரு பரிசை அவனுக்கு கொடுக்கிறார்.

இப்படி ஒவ்வொருவராக வந்து மற்ற சிறுவர்களைப் பற்றி புகழ்ந்து பேசப்பேச புகழப் பட்ட சிறுவர்களை அழைத்து ஒன்றொன்றாக தான் கொண்டு வந்த பரிசுகளை வழங்கிக் கொண்டிருக்கிறார். மகிழ்ச்சியும் சிரிப்புமாக கடந்து கொண்டி ருந்த நிகழ்ச்சி இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது. அப்போது மூன்று சிறுவர் களைப் பற்றி மட்டும் யாருமே எதுவும் புகழ்ந்து கூறாமல் ஏனைய மாணவர்களால் அந்த மூவர் மட்டும் நிராகரிக்கப்பட்டு நிற்கிறார்கள்.

இப்படி ஒரு சூழலை எதிர்பார்க்காத ஆசிரியை, அந்த மூன்று மாணவர்களையும் அழைத்து அவர்களுக்கான பரிசுகளையும் கொடுத்து ஒரு மாதிரி சமாளித்து அனுப்புகிறார்.

ஆனால் நிராகரிக்கப் பட்ட சிறுவர் களில் ஒருவனுக்கு அது மிகவும் வலி மிக்க நிகழ்வாக ஆழ்மனதில் பதிந்து விடுகிறது. சிறுவனுக்கு அப்போது ஆறுவயது தான் இருக்கும் பள்ளியில் நடத்தப் பட்ட அந்த பரிசளிப்பு நிகழ்ச்சியில் தான் மொத்தமாக நிராகரிக்கப் பட்டதாக உணர்கிறான். அப்போது அவனுக்கு வலித்தாலும் அது எதிர்காலத்திலும் தன் செயலாற்றலேயே கட்டுப் படுத்தக்கூடும் என அவன் சிறிதேனும் உணரவில்லை.

ஆனால் பின்னாட்களில் அவன் எந்த புதிய செயல்களைச் செய்ய முனைந்தாலும் அவனால் அதைச் செய்ய முடியாமல் தடு மாறும் போதுதான் அவனுக்கு ஒன்று புரி கிறது.சிறுவயதில்தான்நிராகரிக்கப்பட்டவடு தன்னுள் மிக ஆழமாக புதைந்து கிடக்கிறது. நீ நிராகரிக்கப்பட்டு விடுவாய் கவனமாக இரு என அது தன்னை இரகசியமாக மிரட்டிக் கொண்டே இருக்கிறது என்பது அவனுக்கு பிடிபடுகிறது. எங்கே தான் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயமே தன்னை எதுவும் செய்யவிடாமல் தடுக்கிறது. சாதிக்க வேண்டும் எனும் தன் கனவுகளை எல்லாம் தவிடுபொடியாக்கி ஒரு சராசரியாக தன்னை வலம்வர செய்கிறது என்பதை உணர்கிறான்.

உடனே அவனுக்குள் ஒரு பொறி தட்டுகிறது. நிராகரிப்புகள் தரும் வலிகளை நிராகரிக்கப் பழகிக் கொண்டால் நிச்சயம் தன்னால் அதிகம் சாதிக்க முடியும் என எண்ணியவனாக தன்னையே rejection 100 days என ஒரு ஆய்வுக்கு உட்படுத்துகிறான். அதன்படி ஒவ்வொரு நாளும் யாரோ ஒருவரிடம் ஏதோ ஒன்றை கேட்கிறான். அது நிராகரிக்கப் படுவதை தன் மனதின் திடத்திற்கு தான் அளிக்கும் ஒரு பயிற்சியாக எடுத்துக் கொள்கிறான்.

முதல் நாள் தான் நிராகரிக்கப் படுவதை அவமானமாக கருதும் மனம் நாளடைவில் அதை சாதரணமாக, தன் முயற்சியின் வெவ்வேறு கட்டமாக எடுத்துக் கொள்ள அவன் அடுத்த முயற்சிகளைத் தொடர்கிறான். அது அவனுக்கு பல புதிய முயற்சிகளுக்குவழிவகுக்கிறது.பலவெற்றிக் கதவுகளை திறக்கிறது. சாத்தியமில்லை என இதுவரை நினைத்தவற்றை எல்லாம் எளிதில் சாத்தியமாக்குகிறது.

அதாவது முதலில் நிராகரிப்பை மிக அவமானமாக கருதும் மனது அதை வலியில்லாமல் ஏற்றுக் கொண்டு நிராகரிப் பவர்களை எப்படி கையாள்வது என அடுத்த கட்டத்தைபற்றி உணர்கிறது. நிராகரிப்பை எமோஷனலாக இல்லாமல் தன் முயற்சியின் ஒரு கட்டமாகவும் தன் திறமைக்கான சவாலாகவும் எடுத்துக் கொள்கிறது. நிராகரிக்கப்பட்டவுடன் பெரும் அவமானத்தோடு அத்தனையையும் விட்டு விட்டு ஓட எத்தனிக்காமல் நின்று இது எனக்கானது இதை அடைய வேண்டும் என்றால் நான் என்ன செய்ய வேண்டும் என லாஜிக்கலாக மனம் முயற்சிக்கிறது என்பதை தன் ஆய்வின்படி அவன் அறிகிறான்.

அந்த ஆய்வின் முடிவில் நிராகரிக்கப் பட்டவுடன் தான் முட்டாளாக நடந்ததாக தன்னைத் தானே நினைக்காமல் தன்னு

## ஹைக்கூ

◆◆◆
தவமாய் நிற்கின்றன
நிழல் கொடுத்து
மரங்கள்.

◆◆◆
விரும்பிப் பிடிக்கிறார்கள்
மஞ்சள் பிசாசு
தங்கம்

◆◆◆
பசுமையை நிரப்புகிறது
பூமியின் முகத்தில்
வசந்தகாலம்.

◆◆◆
மரங்கள் வழங்குகிறது
பூமிக்குப் போர்வை
இலையுதிர்காலம்.

◆◆◆
கடத்தல் நடக்கிறது
கண்முன்னே
எறும்புகளின் உணவு

◆◆◆
இளமையில் கல்
குனிந்திடும் முதுகு
புத்தகமூட்டை.

◆◆◆
வெட்டாதீர்கள் மரங்களை
தொடர் போராட்டம்
அடைமழை.

◆◆◆
எல்லா கதவுகளையும்
திறக்கும் திறவுகோல்
சிரித்தமுகம்

◆◆◆
மிச்சம் இல்லாமல்
தின்று தீர்க்கிறது
வறுமை.

◆◆◆
பிறப்பும் இறப்புமில்லை
உயிரோடு இருக்கிறது
புத்தகம்

**கல்லை மலரடியான்**
கல்லக்குறிச்சி - 606213.

டைய ஈகோ அடிபட்டதாக சுருண்டு போகாமல் உணர்ச்சி வசப்படாமல் தன் முயற்சியைத் தொடரும் போது அங்கு நீங்கள் நினைப்பதை சாதிக்கக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகின்றன. நீங்கள் கேட்கக் கூடிய இடத்தில் கிடைக்கா விட்டால் கூட எங்கு கிடைக்கும் அல்லது வேறு எது கிடைக்கக் கூடும் என கூடுதல் தகவல்கள் உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்று அறிந்து கொண்ட அவன் டாக்டர் David Boven, இன்று உலகின் முண்ணனி Rejection Therapist ஆக தன் வாழ்க்கையையே உதாரணமாக்கி நிராகரிப்பை நிராகரிக்க பலருக்கும் கற்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும் என்பது போல் நிராகரிப்பை நிராகரிப்பால் சீர் செய்யுங்கள் எனும் அவர் ஆய்ந்து அறிமுகப் படுத்திய 'ரிஜக்ஷன் தெரப்பி' மேலை நாடுகளில் ரொம்பவே பிரசித்தம். Rejection Proof ஆக செயல் படும் இந்த தெரப்பி பல நிராகரிப்புகளுக்கு மனதை உட்படுத்தக் கூடிய ஒரு பயிற்சியாக செய்யப்படுவதால் பயிற்சியின் முடிவில் பெர்சனலாக சங்கடம் இல்லாமலே மனது நிராகரிப்புக்கு தயார் ஆகிவிடுகிறது.

அதனால் ஒருவரால் எந்த ஒன்றையும் கூச்சமோ அச்சமோ இல்லாமல் கேட்க முடியும். தான் கேட்டது கிடைக்காத போது அதை பெர்சனலாக எடுத்து உணர்ச்சி வசப்படாமல்ஏன்கிடைக்கவில்லைஎனஎதிர் கேள்வி கேட்கவும் ஏன் அது தனக்கு வேண்டி இருக்கிறது என விளக்கம் கொடுக்கவும் முடியும். அதனால் அது கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகுவதோடு ஒரு வேளை கிடைக்காவிட்டால் அதை எந்த சங்கடமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளவும் முடியும்.

நிராகரிக்கப் பட்டு விடுவோமோ என எண்ணும் மனதால் எந்த புதிய முயற்சியையும் எடுக்க முடியாது. நிராகரிப்பை நிராகரித்து விட்டு தன் முயற்சியை தொடரும் மனமே பல புதிய சாதனைகளுக்கு வழி வகுக்கும்.

நிராகரிப்பை நிராகரியுங்கள்! ■

# வள்ளுவர் குறளும் வாரியார் வாக்கும்




**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு.

**மதிப்புரை**

எனது இளமைக்காலங்களில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவுகளை விரும்பிக் கேட்பதுண்டு. அவரது அழகியப் பேச்சும் பேச்சின் செறிவும் எனக்குப் பிடிக்கும். அப்படியான என் மனம் கவர்ந்த வாரியார் வாக்கும் வள்ளுவர் குறளும் என்னை வியப்பிலாழ்த்தி நூலைப் படிக்க வைத்தது.

நூலின் தலைப்பிற்கேற்ப பொருத்தமான விளக்கங்களை சுவைபட விவரித்து வியக்கத்தக்க அளவுக்கு மிக சிறப்பாக வாரியாரின் சொற்பொழிவு நீதிகதைகளை பொருத்தமாக இணைத்துக் குறளுக்கு மிகப்பொருத்தமான விளக்கத்தையும் சுவைபட மிக சுருக்கமாக இன்றைய இளையத்தலைமுறை எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வகையில் சொல்லி இருக்கிறார் அருந்தமிழ்ச்செல்வி, நல்லாசிரியை வே. பூங்குழலி பெருமாள் அவர்கள்.

கவிதைக் கனிகளையும், தமிழிலக்கியக் கதைகளையும், இல்லறம் இனிக்கும் குடும்ப கட்டுரைகளையும், தமிழில் பிழையின்றி எழுத தமிழில் பிழையா? எனக்கேட்டு இலக்கியம் இனிக்கச்செய்தவர் இவர் என்பதால் வள்ளுவர் குறளும், வாரியார் வாக்கும் சிறப்பாகவே படிக்க, சுவைக்க, காக்க, படிப்பிக்கத்தகுந்த நூலாக அமைந்திருக்கிறது.

பக்தியையும், ஒழுக்கத்தையும் வளர்த்த வாரியாரின் கதைகளையும், குன்றா மணிக்குறளையும் இணைத்து பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் மிகச்சிறப்பாகத் தனது திருப்பணியைச் செய்திருக்கிறார் இந்நூலாசிரியர்.

பல்வேறு தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. அந்தந்த தலைப்புக் கேற்ப பொருள் விளக்கம் தந்து இந்நூல் வழி தனது புதியசிந்தனையை விதைத்திருக்கிறார், ஆய்வாளரும், விரிவுரை யாளருமானவர் என்பதை நிரூபித்திருக்கிறார்.

நற்றமிழ் நாவரசியான பூங்குழலியின் பேச்சாற்றலை மேடைகளில் நேரில் கண்டுவியந்திருக்கிறேன், அணிந்துரையில் தமிழ்த்திரு க. லட்சுமிநாராயனன் சொல்லியதுபோல இந்த நூல்வழி தமிழ் மண்ணில் விதைத்ததும் மாணவர்களுக்கு உழைத்ததும் வீண் போகாது என்பது நிதர்சனம்.

கதைகளுக்கு பன்னிரண்டாம் வகுப்பு மாணவி செல்வி ஸ்ரீமதி ஓவியங்கள் வரைந்திருக்கிறார் என்பது மற்றொரு சிறப்பாகும். சிறப்பு நிறைந்த இந்நூல் தமிழுலகில் பேசப்படும் என்பது நிச்சயம். இன்னும்பல மின்னும் நூல்களை தமிழுலகிற்குத் தர வேண்டுமாய் வாழ்த்துகிறேன்.

வானதி பதிப்பகம் - சென்னை வெளியிட்டுள்ள 168 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை 120 ரூபாய்.

தொடர்புகளுக்கு...
vanathipathippakam@gmail.com
Phone : 32434 2810 / 2431 0769

# மௌனமே அழகு...

அமைதியைத் தேடி
அலையும் சிலர் மனம் ..
நிம்மதியைத் தேடி
திரியும் பலர் மனம்..!

ஆடம்பர வாழ்வு இருள்
புகுந்த வீடு
அமைதியான தேடல்
மௌனமே பெரிது!

கண்ணீரின் நிலை வாய்
காட்டும் பொழுது
கவிதையின் மொழி
மௌனமே பொழிவு..!

வெறுத்துப் போகும்
பெண்மையின் உள்ளம்
வழிந்தோடும் தென்றல்
பெண்மையின் மௌனம்.!

கண்பார்க்கும் திசை
பயமில்லா காட்சிகள்
பெண்மையின் திசை
மௌனமே இசை..!

நிலையான தேடல்
பிரிவில்லா அன்பு
அலைபாயும் நொடிகள்
அழைக்காத மௌனம்.!

தொலைந்து போகும்
நினைவுகள்..
கலைந்து போன
கனவுகள்.. !

அவசர உணர்வினிலே
புதுமையான வாழ்வு..
தேடிவரும் மௌனமாய்
சில உறவுகள்...!!

**கவிதாயினி சனா கபூர்**
காத்தான்குடி.

# உண்மை

நிறைந்த சுருக்கங்களுடன்
தாத்தாவின் முகம்
தேய்துத்தேய்தே இன்னமும்
இஸ்திரிபெட்டியுடன் பிழைக்கிறார்.

கோவிலினுள் நுழைந்து
அசையாமல் நின்றுவிடாதே
வாய் திறக்கக்கூடும்
அகன்றவிழி சிற்பங்கள்.

உங்களின் உண்மையான முகம்
அந்த பறவைகளுக்கு தெரிந்து
விடப்போகிறது
கட்ட வேண்டாம்
புதிதாய் கோவில்கள்.

நேற்றைய மயக்கம்
இன்னும் தெளியவில்லை
துள்ளியெழ கேட்கிறேன்
ஒரு கோப்பை தேநீர்.

நன்றுள்ளது அலைபேசி
மென்பொருளில் கோளாறு
பெண்மை கண்ட பிரம்மனின்
படைப்பில் ஆண்மனது.

**- பாணால்.சாயிராம்**



உங்களின் தோல்வி எங்கே
ஒளிந்துள்ளது தெரியுமா?
பிரச்சினைகள் வரும்போது அல்ல
பிரச்சினைகளைக் கண்டு நீங்கள்
பயந்து விலகும்போது.

**- பாரதியார்**

# முற்றுப் புள்ளி



யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்து
எச்சத்தின் மிச்சங்களை
சமாதான வெண்புறா
தன் அகலச் சிறகினால்
விரித்துத் திரையிட்டபடி
உரிமைகளை உறிஞ்சிக் குடித்துவிட்டு
எந்தச் சலனமுமின்றிப்
பறந்து கொண்டிருக்கிறது..!

ஏதாவது ஒரு மூலையை
தன் சிறகினால்
தீயை மூட்டி
எரித்துக்கொண்டுதான் இருக்கிறது..
எரிகின்ற வயிறுகளைப் போல..!

எமது கனவுகளைக்
கண்களுடன் கொத்திவிட்டு
சமாதானக் கீதமிசைக்கும்
வெண் புறாவிற்கு
என்ன ஒரு குரூட்டுத்தனம்..!

தசாப்தங்கள் தாண்டியும்
மூச்சுத் திணறும்படி
பிணவாடை வீசும் காற்றில்
தூசித் துணிக்கைகள்
கறை படிந்திருப்பதனால்
அடிக்கடி மின்னல்
அங்குமிங்கும் வெட்டியபடிதான்
இருக்கின்றது..!

விழிகளில் ஒளியிழந்து
கல்லும் கரைவதுபோல்
தேசமே அழுகிறது
சுதந்திரமாய் வாழ்ந்திடத்தான்
விழிகள் ஏக்கமாய்
வழிகள் தேடி
ஓய்ந்ததாகத் தெரியவில்லை..!

மனிதம் இறந்துவிட்ட
செய்தி உண்மையாகினும்
மனிதன் சுதந்திரத்திற்கான
அங்க அடையாளத்துடன்
படைக்கப்பட்டவன்
அவனை அடிமைச்
சங்கிலியில் பிணைத்து
வதைக்கத் துடிக்கின்றது
இறந்துவிட்ட மனிதம்.!

இனப்படுகொலை செய்யப்பட்ட
ஆயிரம் ஆயிரம்
ஆத்மாக்களின்
எலும்புகளையும் கசக்கிப் பிழியும்
வேதனைகளின் ஓலமே
இலங்கை நாட்டின்
தேசிய கீதமாகிப்போனது..

உலகம்
எல்லோருக்கும்
பொதுவானதுதான்
உரிமை எல்லோருக்கும்
சமதர்மமானதுதான்
சூரியனும் சந்திரனும்
காற்றும் திசையும்
எல்லோருக்கும் சொந்தமானவையே!

சமாதான வெண் புறாவே
இனியாவது
நாற்புறமும்
பரந்து விரிந்த
உனது இறக்கைகளால்
அந்த முற்றுப் புள்ளியைத் தூக்கி
உரிமைகள் பறிக்கப்படும்
இடத்தில் போட்டுவிடு
கொத்திச் சென்றுவிடாதே
அந்த முற்றுப் புள்ளிதான்
எமது இரத்தப் புள்ளி!

**அன்பழகி கஜேந்திரா**

மன்னார், ஈழம்.



# நேர்காணல்

நேர்கண்டவர் : **இராம வேல்முருகன்**

# மதுரையில் வாழும் ஒரு காளமேகப் புலவர்

**காளமேகப்புலவர் தமிழ்ப்புலவர்கள் வரிசையில் நீங்கா இடம் பெற்ற கவிஞர். நினைத்த மாத்திரத்தில் கவிதைகளை யாப்பதில் வல்லவர். அதுவும் கவிஞர்களுக்குச் சிரமம் எனக் கருதப்படும் வெண்பாவில் சரளமாகப் பாக்கள் வடிப்பவர். காளமேகப்புலவரைப் போலவே மதுரையில் 40 வருடங்களாக ஒருவர் பாக்கள் யாத்து அசத்தி வருகிறார். ஆம் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிறன்று மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ள மணியம்மை பள்ளியில் இவரது கணீர்க்குரலைக் கேட்கலாம். இவரது பட்டறையில் பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் ஏராளம். அவற்றுள் திரைப்பட இயக்குநர்களும் உண்டு. மருத்துவர்களும் உண்டு. ஆம் அத்தகைய சிறப்பு மிக்க பாவலர் திருமிகு வீரபாண்டியத்தென்னவரின் நேர்காணலைத்தான் இப்போது காணப்போகிறோம்.**

வணக்கம் ஐயா

மதுரையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்த் தொண்டு ஆற்றிவரும் கவிஞர்களுள் தாங்களும் ஒருவர். தங்களை தமிழ்நெஞ்சம் இதழ் சார்பாக வணங்கி மகிழ்கிறேன்.

- வீரபாண்டியத் தென்னவன் என்பது தங்கள் இயற்பெயரா? புனைப்பெயரா?

இயற்பெயர்தான். ஆனால் பள்ளியில் வீரபாண்டியன் என்று பதிவு செய்யப் பட்டிருந்தது. பின்னாளில் பெயரை வீரபாண்டியத்தென்னவன் என்றே மாற்றிக் கொண்டு விட்டேன்.

- ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்று வங்கியிலே பணி யாற்றிய தாங்கள் தமிழில் வெளுத்து வாங்குவது எப்படி?

ஆங்கில இலக்கியத்தோடு வரலாற்றிலும் முதுகலை பட்டம் பெற்றுள்ளேன். ஆனால் தமிழில் நான் வெளுத்து வாங்குவதற்கு இறையருளும் எனக்கு அமைந்த மதுரை தியாகராஜா கல்லூரி பேராசிரியர்களே காரணம். ஆங்கிலத்திலும் அதற்கிணை யாகத் தமிழிலும் அழகாக பாடம் நடத்தியதாலேயே தமிழில் என்னால் இவ்வாறு பயணிக்க முடிந்தது.

- மதுரையே உங்கள் பூர்வீகமான ஊரா? பணிநிமித்தம் மதுரைக்கு வந்து மதுரையிலேயே தங்கிவிட்டீர்களா?

மதுரையே எனக்குப் பூர்வீகமான ஊர். பணியும் மதுரையிலேயே கிடைத்தது. எனவே நான் எப்போதும் மதுரைவாசிதான்.

- 5000 க்கும் மேற்பட்ட கவியரங்கங்கள் என்பது மிகப்பெரிய சாதனை என்று தாங்கள் கருதுகிறீர்களா?

சாதனை என்றெல்லாம் கருதவில்லை. நாற்பது வருடங்களுக்கு முன்பு மதுரையில் வங்கியில் பணியாற்றியபோது எனது தமிழ் ஆர்வத்தைப் பார்த்து எனது மேலதிகாரி ஒவ்வொரு வாரமும் வங்கியிலேயே சனிக் கிழமைகளில் கவியரங்கம் நடத்த அனுமதி அளித்தார். அப்போதெல்லாம் சனிக்கிழமைகளில் 12 மணிவரை வங்கிப் பணி; 12-1 கவியரங்கம். இவ்வாறு தொடங்கியதே கவியரங்கப்பணி. மாதம் குறைந்தது 4 . வெளியூர் கவியரங்கங்களும் அவ்வப்போது செல்வதுண்டு. ஆயிரங் கணக்கான பட்டிமன்றங்களிலும் கலந்து கொண்டுள்ளேன்.

- மாமதுரைக் கவிஞர் பேரவை எவ்வளவு காலமாக நடத்தப்பட்டு வருகிறது?

சுமார் 40 ஆண்டு காலமாகச் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் வங்கி வளாகத்தில் செயல்பட்டு வந்த கவி யரங்கம் பின்னர் தெற்கு மாசிவீதி குஜராத் சங்கம் கிழக்கு மாசிவீதி நாடார் சங்கம் ஆகியவற்றைக் கடந்து இப்போது வடக்கு மா சி வீதி மணியம்மை பள்ளியில் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிறுகளில் நடைபெற்றுவருகிறது.

- முகநூல் என்ற சமூக ஊடகம் வழியாக இதுவரை தாங்கள் பயணிக்காதது ஏனோ?

சிறப்புக் காரணம் ஏதுமில்லை. அந்தத் தளத்தில் எனக்குப் பயணிக்கத் தெரி யாததே காரணம் ஆகும் கூடிய விரைவில்

பாவலர் அருணா செல்வம் அவர்களின் சித்திரக் கவி நூல் வெளியிட்ட போது





தஞ்சைத் தமிழ் மன்ற ஆண்டு விழாவில் கவிஞர் பொற்கைப்பாண்டியன், கவிஞர் அகன், கவிஞர் பொன்மணிதாசன், கவிஞர் வெற்றிப்பேரொளி ஆகியோருடன்....

கற்றுக்கொண்டு பயணிக்க முயல்கிறேன்.

- *தங்குதடையில்லாமல் சரளமாகக் கவிபாடும் தங்கள் திறன் எவ்வாறு சாத்தியமானது? ஏதேனும் பயிற்சி எடுக்கிறீர்களா?*

இறைவன் அருளைத்தவிர வேறு ஏதும் இல்லை. எனது குலதெய்வம் மூகாம்பிகை அம்மா மதுரையில் உள்ள மாரியம்மன் காளியம்மன் எனது தாய் மதுரை மீனாட்சி அம்மன் இவர்களது அருளன்றி வேறெதுவும் இல்லை. பயிற்சி எதுவும் எடுப்பதில்லை.

பாவலர் இராம வேல்முருகன், கோவிந்தராஜன் பாலு இவர்களுடன் **பாவலர் திருமிகு** வீரபாண்டியத் தென்னவன் .



- *நடிகர் திலகம் சிவாஜி கணேசன் புரட்சித்தலைவர் எம் ஜி ஆர் இவர்களைச் சந்தித்ததுண்டா?*

சந்தித்து உள்ளேன். காரைக்குடிக்கு அருகே திரு கமலாதியேட்டர்ஸ் சிதம்பரம் அவர்களின் இல்லத்திருமணவிழாவில் நடிகர் திலகம் அவர்களைச் சந்தித்து உள்ளேன். அவரைப் பற்றி நான் பாடிய ஆசுகவியைக் கேட்டுப் பாராட்டினார். அடுத்து நடத்த ஒரு நிகழ்வை எனது அருகிலேயே சுமார் 50 நிமிடங்கள் வரை அமர்ந்து ரசித்துச் சென்றார்.

கல்லூரி நாள்களில் ஒரு நாடகம் நடித்த போது எங்கள் கல்லூரிக்கு ஒரு சுழல் கோப்பை கிடைத்தது. அதற்கு முந்தைய இரண்டு வருடங்களும் அதனைப் பெற்ற கல்லூரி என்பதால் அவ்வருடமும் அக்கோப்பையைப் பெற்றால் அதனை எங்கள் கல்லூரியிலேயே தக்க வைக்கலாம் என்பதால் மிகுந்த போட்டிகளுக்கிடையே நாங்கள் வென்றோம். அக் கோப்பையை வெல்ல நானும் ஒரு காரணம் என்பதால் என்னை நேரில் சந்திக்க எம் ஜி யார் அவர்கள் கல்லூரிக்கு வருகை தந்தார். அவர் எம்ஜியார் என்று தெரியாமலேயே

அவரிடம் அளவளாவிய அனுபவம் எனக்கு ஏற்பட்டது.

- உலகத்தமிழ்ச்சங்கம் குறித்த தங்கள் கருத்து என்ன?

எம்ஜியார்அவர்களால்தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழ்ச் சங்கம் அவராலேயே இடம் தேர்வு செயய்ப்பட்டு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்களால் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள சங்கமாக உள்ளது. பலவகைகளில் கவிஞர்களுக்கு உதவிகரமாக உள்ளது.

- மதுரைமீனாட்சிஅம்மன்கோயிலுக்கும் தங்களுக்குமான தொடர்பு பற்றி..


நிறைய உண்டு. ஒருமுறை மழை வேண்டி பாடல்கள் பாடினோம். தொடர்ந்து 46 வாரங்கள் கோயில் பொற்றாமரைக் குளத்தருகே கவியரங்கங்கள் நடத்தி யுள்ளோம் பின்னர் அதே வளாகத்தில் உள்ள திருவள்ளுவர் மன்றத்தில் பல நிகழ்வுகளை நடத்தியுள்ளோம்

- கர்நாடகாவில் உள்ள மூகாம்பிகை கோயிலுக்குச் சென்று வருவது ஏன்?

மூகாம்பிகை எங்கள் குலதெய்வம் என்பதால் வருடம்தோறும் அங்கே நான் குடும்பத்துடன் சென்று வருவது வழக்கம். செல்லும் போதெல்லாம் முடியிறக்கிவிட்டு வருவேன். மூகாம்பிகையின் அருளால் நிறைய பாடல்கள் பாடியுள்ளேன்.

- தூயதமிழில்தான்பேசவேண்டும்கவிதை எழுத வேண்டும் என்கிறீர்களே? பேசும் சொல் தமிழ்ச்சொல்தான் என்பதை எப்படி அறிய இயலும்?

அப்படிக் குறிப்பிட்டு நான் சொல்வதில்லை. தமிழில் இல்லாத சொற்கள் இல்லை. பேசும் பொழுதும் எழுதும் போதும் அந்நிய மொழி கலக்காமல் நாம் எழுதுவது நலம். வடமொழி எழுத்துகளை வடமொழிச் சொற்களைச் சேர்த்து


பாவலர் ஸ்ரீ ஸ்ரீ வீரபாண்டியத் தென்னவன்

எழுதும் மணிப்பிரவாள நடை இப்போது வேண்டாம் என்பதே எனது விருப்பம்.

தமிழ்ச் சொல்லை அறிய ஒரு எளிய வழி உண்டு. ஒரு சொல்லில் முதல் எழுத்தை நீக்கி விட்டு வேறொரு எழுத்தைச் சேருங்கள். புதிய சொல் கிடைக்கும். ஆனால் வேறு மொழிச் சொல்லில் கிடைக்காது.

எடுத்துக்காட்டாக சொல் என்ற சொல்லையே பாருங்கள். சொல்லின் முதல் எழுத்தை நீக்கி, வில் கல் பல் என்ற சொற்களைப் பெறலாம் இவ்வாறு எழுத்து அழுத்து கழுத்து பழுத்து வழுத்து... இப்படி அமைந்தால் அது தமிழ்ச் சொல் ஆகும்

நமஸ்காரம் ஜமக்காளம் இவற்றை மாற்றுங்கள் புதிய சொல் கிடைக்காது.

இவ்வாறு நாம் தமிழ்ச்சொற்களை அறிய முடியும்

- **தமிழன்னையே போற்றி என்ற ஒரு நூலை எழுதியுள்ளீர்களே அதன் காரணம் யாது?**

தமிழன்னைத் தமிழ்ச்சங்கம் என்றவொரு அமைப்பு கருங்கல் கண்ணன் என்பவரால் தொடங்கப்பட்டுள்ளது. அதன் நோக்கம் தமிழன்னைக்கு ஒரு ஆலயம் அமைப்பதே ஆகும். அவ்வாலயத்தில் தமிழன்னையைப் போற்றிப்பாட ஒரு நூல் வேண்டும் என அதன் நிறுவனர் கேட்டுக் கொண்டதால் 1000 போற்றிகள் கொண்ட அந்நூலை எழுதினேன். அது சிறப்பாகத் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களால் ஒரே இரவில் வடிவமைக்கப்பட்டு மதுரையில் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது.

- **தாங்கள் எழுதியுள்ள நூல்கள் பற்றி ஒரு சில வரிகளில்.**

நிறைய நூல்கள் எழுதியுள்ளேன். பெரும்பாலும் இறைவனுக்காக எழுதப்பட்டவை. 46 நூல்கள் எழுதியுள்ளேன். அவற்றுள் 26 நூல்கள் அந்தாதி நூல்கள்.

தஞ்சைத் தமிழ் மன்ற ஆண்டு விழாவில் விருதுகள் பெறும் தருணம்.





தஞ்சைத் தமிழ் மன்ற ஆண்டு விழாவில் கம்பதாசர் விருது பெற்ற போது

- *வளர்ந்து வரும் இளம்கவிஞர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை.*

தற்காலத்தில் மிகுந்த ஆர்வமுடன் நிறைய இளங்கவிஞர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு நிறைய வாய்ப்புகளும் தளங்களும் இன்று உள்ளன. அவற்றைச் சரியாக அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ்மொழியின் தரம் குறையாமல் எழுத வேண்டும். அந்நிய மொழிகளைக் கலக்காமல் எழுத வேண்டும்.

- *மரபுக்கவிதை குறித்து*

மரபுக்கவிதை என்பது தாயைப் போன்றது. ஒரு பெண் காதலியாக, இளம்பெண்ணாக, தாயாக அனைத்து பரிமாணங்களிலும் ஒளிர வேண்டும். எல்லா பெண்களும் தாய்மை அடையும் போதுதான் முழுமை அடைகிறார்கள். எனவே ஒரு கவிஞன் மரபுக் கவிதை எழுதும் போதுதான் முழுமையான கவிஞன் ஆகிறான் . எனவே மரபுக் கவிதை ஒவ்வொரு கவிஞனும் பயணிக்க வேண்டிய தடம்.

- *புதுக்கவிதையின் போக்கு.*

வரவேற்கத் தக்கதே. புதுக்கவிதை என்பது பாரதி காலத்திலேயே வசன கவிதை என்ற பெயரில் வந்து விட்டது. ஆனால் வெறும் புதுக்கவிதை மட்டும் எழுதாமல் கவிதையின் அத்தனை வடிவங்களிலும் கவிஞர்கள் கவிதைகள் படைக்க வேண்டும்.

- *தங்களுக்குப் பிடித்த சமகாலக் கவிஞர் களைப் பற்றி.*

நிறைய கவிஞர்களைச் சொல்லலாம்.


என்னுடன் இளம்வயதில் பயணித்த மதுரைக் கவிஞர் கவிவித்தகர் பொற்கைப்பாண்டியன் அவர்கள்; என்னுடன் பயணிக்கும் ஹைக்கூ இரவி அவர்கள். குடந்தைக் கவிராயர் பாலு கோவிந்தராசனார் வலங்கைக் கவிஞர் இராம வேல்முருகன் இப்படி நிறைய கவிஞர்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். எல்லோருமே சிறப்பாக எழுதக் கூடியவர்களே!



பாவலர் திருமிகு வீரபாண்டியத் தென்னவன்

- தமிழ்நெஞ்சம் இதழ் மற்றும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களைப் பற்றி ஒருசில வரிகளில்...

உலகமெங்கும் வலம் வரும் இதழான தமிழ்நெஞ்சம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் முதல்நாளே சிறப்பாக வெளியிடப்படுவதும், அவற்றில் உலக மெங்கும் உள்ள தமிழ்க் கவிஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் கவிதையை வெளியிடுவதும் சிறப்புக்கும் பாராட்டுக்கும் உரியது. கதை கவிதை கட்டுரைகள் உலகத்தரம் வாய்ந்ததும் வாழ்த்துக்குரியதே!




# தூயதமிழில்தான் பேசவேண்டும் கவிதை எழுத வேண்டும்

- 46 நூல்களை எழுதி இருக்கிறீர்கள். அவைகளில்சிலவற்றைகுறிப்பிடுவதுடன் எதிர்கால இலக்கு குறித்தும் சொல்லவும்.

கற்பகவிநாயகர் அந்தாதி, மூகாம்பிகை அந்தாதி, மீனாம்பிகை அந்தாதி, அபிராமவல்லி அந்தாதி, எதுகவிதை, எண்ணும் எழுத்தும் ,தமிழின் கண்கள், தமிழை மறப்பவன் தமிழனா?, ....... மற்றும் தமிழன்னையே போற்றி (சமீபத்தில் வெளியீடுசெய்யப்பட்டது)

தனியான இலக்குஎதுவும்இல்லை. மாமதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தொடர்ந்து நடத்துவது; தற்போதைய ஊரடங்கு காலத்திலும் இணையம் வழியாகக் கவியரங்கம் நடத்துவது.

தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் ஒரு தன்னல மற்ற தமிழ்த்தொண்டர். கவிஞர்களின் நூல்களை வடிவமைத்தல் நூலின் மேலட்டையை வடிவமைத்தல் போன்ற பணிகளை எந்த விதமான கைமாறும் இன்றிச் செய்து தருபவர். இரவு பகல் பாராது உழைப்பவர். எடுத்த செயலை விடாது முடிப்பவர், இப்படி எவ்வளவோ சொல்லலாம். இவரை மா மதுரைக் கவிஞர் பேரவை எதிர்வரும் ஆண்டில் அழைத்து நிச்சயமாகக் கவுரவிக்கும். என்பதைக்கூறி வாழ்க வளர்க என்று வாழ்த்துகிறேன்.

பாவலரிம் எண்ணங்கள் சிறப்பாகி சிறந்திட நாமும் வாழ்த்துக்கூறி விடைபெறுகிறோம். நன்றி! ■

# பெண் படும் பாடு

ஐந்து வயதில் வளையத்
துவங்கும் அரும்பு,
துரும்பாய் இளைக்கும் வரை
படும் பாடு,
தூரியின் சங்கிலியாய்
நில்லாமல் ஆடுகிறது,

பிறரின் மகிழ்வுக்காக
ஆளான வயதில்
பருவப் பக்குவத்தை
சுமக்கிறாள்,
பல மாற்றம்
உடலோடு பல
வலியை சுமக்கிறாள்,



பெண்ணைப் பூவாகப்
போற்றுகிறோம்,
பூவுக்குள் தேனாக
ருசிக்கிறோம்,
ருசிக்குள் பல
கசப்புகள் இலை
மறை காயாக
வெளியின்றி போகிறது,

மணம் முடித்து
புகுந்த வீடு அடி வைத்து,
புதிதாய் சுமக்கும்
சுமைகள் உடலை
மட்டும் வாட்டவில்லை,
உள்ளத்தையும்
வாட்டுகிறது,
உயிர் போகும்
வலியாக உள்ளுக்குள்
எரிந்தே உணர்வை
மறைத்து வாழும் பெண்,
உயிரைக் கருவாய் சுமந்தும்,
உயிரைக் கையில் பிடித்தும்,
மரணத்தின் வாயில்வரை வந்து
மறு ஜென்மமாய் பிறக்கிறாள்,
பெண் படும் பாடு
பூமாதேவியாய்
வலியிருந்தும்
பூமியாய் குடும்பத்தை
சுமக்கிறாள்,
சாமியாய் வாழ்கிறாள்.

- ரஞ்சினி சந்திரமோகன்.

# எனதானவன்

என் வார்த்தைகளை நெய்யும்
அவனுள் மௌனத்தின் சாயல்
இசைந்திருக்கிறது.
அர்த்தமற்ற பார்வைகளுக்கு
விநோதங்கள் காட்டி
ஆர்ப்பரிக்கும் பட்டாம்பூச்சியின்
சிறகுகொண்டு நிறைபவன்

எப்போதாவது
அக்னியின் தகிப்பிலும்
லயித்திருப்பில்
நேரத்தைக் கடப்பான்
நேச வெளியின்
வேட்கையை பூக்களின்
இடைவெளிக்குள் வியாபித்து
அழகுறச் செய்யத் ததும்பும்
அவன் கண்களுக்குள்
பூனைவிழிகளின் நீலச் சாயல்

புதிர்மையை
விடுவிப்பது போல அல்ல
அவன் பார்வைகளை
விடுவிப்பதென்பது
சுழலும் காதலை
உள்ளடங்கி இருந்தாலும்
அவனின் சித்திரம்
நானாகிப் போனதை
பார்ப்பவர் எவர் கண்களுக்குள்ளும்
நிச்சயம் காணலாம்!

- ஆனந்தி ராமகிருஷ்ணன்



# புத்தகப் பித்தர்கள்

என்னைச் சுற்றி வெறித்தனமான புத்தகப் பித்தர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் வாழ்க்கை வெகு அழகாக முன்னகர்கிறது என்பதைப் பல சமயங்களில் உணர்ந்திருக்கிறேன். எங்கள் வீட்டில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள். சீனிவாசன் தனியாகச் சேகரித்தவை, நான் தனியாகச் சேகரித்தவை இரண்டு வகைகளையும் சேர்த்தபோது, வீட்டின் சுவர்கள் புத்தகங்களால் ஆனவையாகின.

இந்த முறை சிங்கப்பூர் சென்ற போது, உடைகளை விட அதிகமான எண்ணிக்கையில் புத்தகங்களைத் தான் எடுத்துச்சென்றிருந்தேன். விமான நிலையத்தில், புத்தக எடைக்கான தொகை மிக அதிகமாகியது, தயங்கினேன். எதற்கும் சீனிவாசனை வெளியில் காத்திருக்கச் சொன்னேன். புத்தகங்களினால் எடையோ தொகையோ அதிகமானால் அவரிடமே விட்டுச் சென்றுவிடலாம் என்ற எண்ணம் இருந்தது. அங்கிருந்தே செந்தில்குமார் நடராஜனை அழைத்து, என்ன செய்வது என்று கேட்டேன். ‘அது எவ்வளவு அதிகமான எடையாக இருந்தாலும் சரி, எவ்வளவு தொகையானாலும் சரி, தூக்கிப் போட்டு எடுத்துட்டுவாங்க, சகோ. பார்த்துக்கலாம்’, என்று உறுதியாகச் சொல்லவும் அவ்வளவு புத்தகங்களையும் என்னுடன் சுமந்து சென்றேன்.



ஒரு சோகமான காலகட்டம். ரிஷிகாவின் முகத்தில் புன்னகை மறைந்து எப்பொழுதும் அவள் முகத்தில் சோகத்தின் ரேகைகள் ஓடிக்கொண்டேயிருந்தன. ஒரு நாள் ரிஷிகா என்னிடம், ‘இந்தப்புத்தகம் கிடைக்குமா?’, என்று. கேட்டாள். மாலையெல்லாம் தேடித்தேடி அலைந்து கடைகளைப் பூட்டும் நேரத்தில் ஃபோரம் வணிக அரங்கின் ஒரு கடையில் புத்தக அடுக்குகளின் மறைவில் அந்த நூலை கண்டடைந்தோம். அப்பொழுது அவள் முகத்தில் கண்ட பிரகாசம் என்னுடைய நிறைய அவநம்பிக்கைகளைத் தவிடு பொடியாக்கின. ஒருவர் முகம் புத்தகங்களால் பிரகாசமடைகிறது என்றால், எந்த விதமான வன்மங்களையும் வன்முறைகளையும் அவர் கடந்து விடுவார் என்பதே என் நம்பிக்கை.

இந்தத்தனிமைக்காலத்தையும் நான் புத்தகங்களாலேயே கடந்தேன்.

புத்தகங்களை உருவாக்குவது, புத்தகங்களைப் பின்பற்றுவது இவற்றைத் தவிர வேறு என்ன செய்வது. எழுதத் தெரிந்த பின்னர், எழுதுவது அல்லாமல் வேறு என்னசெய்வது என்பது போல் தான் இந்த நாட்கள் நகர்கின்றன. நாமெல்லோருமே புத்தகங்களின் வாரிசுகள். புத்தக மரபின் விதை முளைகள். நூல்கள் செய்வதை அரசோ, அரசியல்வாதிகளோ செய்யமுடிந்ததில்லை. ஒரு நூல் சமூகத்தின் போக்கை நாம் எதிர்பார்க்க முடியாத அளவிற்குப் புரட்டிப் போடக்கூடியது.

நாம் தொடர்ந்து நன்னூல்களை வாசிப்போம், நன்னூல்களைப் படைத்துக் கொண்டே இருப்போம். ஒவ்வொரு வீட்டிலும்ஒருநூலகத்தைக்கட்டமைப்போம். வீடு என்பதே ஒரு நூலகமாகத் தான் இருக்கவேண்டும். தமிழ் அறிவு மரபின் விளைச்சல் என்பது எல்லோரும் எழுதுவதும் எல்லோரும் வாசிப்பதும் எல்லோரும் மொழி வழியாக, சிந்தனை வழியாக, எழுத்தின் வழியாக நல்லுலகத்தைப் படைப்பதை நோக்கிச் செயல்படுவது தான். ஒரு புத்தகத்தை விடச் சிறந்த பகுத்தறிவு அடையாளம் வேறு இல்லை. நூல்களே நம் வாழ்க்கைத்துணைகளாக இருக்கும் சிறந்த தகுதிகளையுடையவை!

எல்லா புத்தகப்பித்தர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்!

**- குட்டி ரேவதி**

பாபாசாகேப் அம்பேத்கர்
தான் எழுதிய நூல்கள் மூலம்
கோடிக்கணக்கான மக்களின்
வாழ்க்கையையே மாற்றினார்.

அவற்றைப் படிப்பதன்
மூலம் நீங்கள்
உங்கள் வாழ்க்கையை
மாற்றிக் கொள்ளுங்கள்!



# புத்தகங்கள்!

அலமாரிகளில் அலங்கரிக்கப்படும்
அழகு பெட்டகங்கள்!
ஆழ்மனசை வருடிக் கொடுக்கும்
புல்லாங்குழல்கள்!
காயங்களுக்கு மருந்திடும்
காதல் மருத்துவர்கள்!
சிரிக்கக் கற்று கொடுக்கும்
நைட்ரஸ் ஆக்சைடுகள்!
சுவாசிக்க உதவிடும்
ஆக்ஸிசன்கள்!
கோவத்தைக் காவு வாங்கும்
கொஞ்சும் குழந்தைகள்!
மனதை மாயமாக்கும்
மானிட தேவதைகள்!
மல்லுக்கட்டி மாநாடு நடத்தும்
மன்மத அம்புகள்!
அளவளாவி அன்பை செலுத்தும்
அர்ச்சக வாரிசுகள்!
அழுகையின் ஆறாத வடுக்களை
ஆற்றும் அகிம்சைவாதிகள்!
என்னை நாளும் நாளும் படைக்கின்ற
நவயுக பிரம்மாக்கள்!
முத்தங்களைத் தினம் கொடுக்கும்
மோகன கீதங்கள்!
சித்தங்களைச் சரிசெய்யும்
சீர்திருத்தவாதிகளின் சொந்தங்கள்!
புரட்சிக் கற்றுத்தரும்
சேகுவேராவின் சந்ததிகள்!
தீமைகளை நன்மைகளால் ஆள வைக்கும்
இயேசுவின் சீடர்கள்!
காலத்தைக் கருத்துகளால் ஆளுகின்ற
காத்திருப்புகளின் கடைசி வருடல்கள்!
ராட்சச நாக்குகளை ரசனையற்றதாக்கும்
ராணுவத் தளவாடங்கள்!
அத்தனைக்கும் ஆசைப்பட வைக்கும்
புத்தரின் மருரூப மாந்தர்கள்!
அகங்களைப் புத்தாக்கம் செய்யும்
ஜெகத்தின் சில்மிஷ சீண்டல்கள்!

**முனைவர் ம.தமிழ்ச்செல்வி**



வானக்கட்டிலில்
மேகத்தைப் போர்த்தி
ரம்யமாகத் தூங்குகிறது
நிலாக் குழந்தை..

- **ரோஸினி ஜெயபால்**

# ஏனோ?

நற்றமிழை நாவுரைக்க நாணம் ஏனோ?
நற்குறளை அருந்திடவே நாணம் ஏனோ?
கற்றதமிழ் கரத்திருக்கக் கலக்கம் ஏனோ?
கம்பனையே பருகிடவே தயக்கம் ஏனோ?
உற்றதமிழ்த் துணையிருக்க ஒடுக்கம் ஏனோ?
உயர்சிலம்பைச் சுவைப்பதிலே நடுக்கம் ஏனோ?
சுற்றமெனத் தமிழிருக்கச் சோர்வும் ஏனோ?
சுவையாய்ப்பா ரதியிருக்க வாட்டம் ஏனோ?

பெற்றவளைப் பேணுதலில் பிணக்கம் ஏனோ?
பிள்ளைத்த மிழ்சுவைக்கச் சுணக்கம் ஏனோ?
குற்றமிலாத் தமிழுயர்வைக் குறைத்தல் ஏனோ?
குறவஞ்சிக் குளியலையே மறுத்தல் ஏனோ?
முற்றமதில் முல்லையினை வெறுத்தல் ஏனோ?
முச்சங்கத் தமிழினிமை மறத்தல் ஏனோ?
மற்றமொழி மட்டிலுமே நாட்டம் ஏனோ?
மறத்தமிழின் மாண்பையவ மதித்தல் ஏனோ?

பற்றறுத்துத் தமிழினைநீ வெறுத்தல் ஏனோ?
பாலமிழ்துத் தமிழினையே மறுத்தல் ஏனோ?
வெற்றுகளில் வீணாய்உன் முயக்கம் ஏனோ?
வெல்லுதமிழ் வீறறியா மயக்கம் ஏனோ?
இற்றுவிழும் போலியினில் இணக்கம் ஏனோ?
இறைமொழியாம் நம்தமிழ்மேல் பிணக்கம் ஏனோ?
சிற்றறிவில் சிந்தனையைச் செலுத்த லாமோ?
செந்தமிழால் நீஓங்கும் சீர்வேண் டாமோ?

**கே. பி. பத்மநாபன் ,**
**சிங்காநல்லூர் , கோவை--. 641005.**



பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
செப்டம்பர் 2020



# வித்தாரக் கள்ளி

புதிர் போட்டு வருகிறா - பூப்
போலச் சிரிக்கிறா
எதிர் வீட்டுச் சன்னலிலே - முழு
நெலவா உதிக்கிறா
வித்தாரக் கள்ளியிவ - காதல்
விதை போட்டுப் போகுறா
பித்தான நெஞ்சுக்குள்ளே - தெனம்
பனிமழையத் தூவுறா

ஆலமர விழுதாலே - அவ
ஊஞ்சல் கட்டி ஆடுறா
சோளக் குயில் போல - அங்கே
ராகம்போட்டுப் பாடுறா
ஓடிவரும் வெள்ளம் போல - அவ
உள்ளமெல்லாம் சுத்துறா
தேடி வந்தச் செல்லமவ - தெனம்
தெவிட்டாம இனிக்குறா

பரிசம் போட வரச்சொல்லி - மெல்ல
உரசிவிட்டுப் போகுறா
பட்டுச்சேல வாங்கிவர - நான்
சிட்டாகப் பறக்குறேன்
ஊருசனம் சாதிக்குள்ளே - பெருந்
தீயக் கொளுத்துது
பாவிமக உசுரவிட்டு - என்ன
தவிக்கவிட்டுப் போகுறா !

சாதிமறுப்பு கல்யாணத்த - நம்ம
ஊரு சனம் தூத்துது
சுதந்திரப் பறவைகள - சுட்டு
வீழ்த்திச் சிரிக்குது
படிக்கத்தான் இனிக்குது - நம்ம
காதலோட சரித்திரம்
நடைமுறையில் நசுக்குதே - வீண்
கௌரவத்தின் ஆணவம்

**கா.ந.கல்யாணசுந்தரம்**